ஏப்ரல் 2008 April | இதழ் 207 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION










Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி
a monthly information digest

18th Year வது ஆண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஸ்தாபிதம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
அன்ரன் கனகசூரியர்
குயின்ரஸ் துரைசிங்கம்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

## மறைந்திருக்கும் இனத்துவேசம்?

கனடாவில் இனத்துவேசம் இருக்கக்கூடாது என்பதில். பல்வேறு மட்ட அரசாங்கங்களும் விழிப்பாக உள்ளன. இனத்துவேச ஒழிப்புக்கென தனியான திணைக்களங்கள், நூற்றுக்கணக்கான உத்தியோகத்தர்கள்/அதிகாரிகள் என்று பலர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இனத்துவேசத்துக்கு எதிரான செயலகம் (anti racism secretatriat) என்ற பெயரில் மாகாண ரீதியாகவும் அலுவலகங்கள் இயங்குகின்றன. இலட்சக் கணக்கான டாலர்கள் இது தொடர்பான கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்த செலவு செய்யப்படுகின்றது. வருடத்திலொரு நாள் இதற்கெனப் பிரகடனம் செய்யப்பட்டு அனைத்து மக்களிடமும் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகின்றது. ஆனாலும் என்ன, இனத்துவேசம் பதுங்கி இருப்பதையும், அவ்வப்போது இது வெவ்வேறு வடிவங்களில் தன்னை அடையாளம் காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு பிரமுகர்கள் மிக அண்மையில் தெரிவித்த சில கருத்துகள் 'இனத்துவேச'மாகவே பார்க்கப்பட வேண்டியவை. இது தொடர்பான வாதப்பிரதிவாதம் அரசியல் வட்டாரங்களில் எழுந்துள்ளது. கருத்துகளை வெளியிட்ட ஒருவர், மிசிசாகா நகர முதல்வர். அடுத்தவர், கவார்தா பைன் றிட்ஜ் மாவட்ட கல்விச் சபை உறுப்பினர். இவர்கள் அப்படி என்னதான் சொன்னார்கள் என்பதை இங்கு பார்ப்போம.

கனடாவின் ஆறாவது பெரிய நகரமாகத் திகழும் மிசிசாகாவின் நகர முதல்வராக விளங்கும் ஹசல் மக்கலின் அம்மையார், கனடாவில் மிகக்கூடிய காலம் மேயர் பதவியை வகிக்கும் சாதனையாளர். கடந்த பதினொரு மாநகரசபைத் தேர்தல்களில் மேயர் பதவிக்குப் போட்டியிட்டு, தொடர்ச்சியாக வெற்றிபெற்று, 32 ஆண்டுகள் மேயராகவிருக்கும் கின்னஸ் சாதனையாளரான இவருக்கு 92 வயது. 2010' ஆண்டுத் தேர்தலில் தாம் போட்டியிடப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்து விட்டார். மறுபுறத்தில் கனடியக் குடிவரவாளர்கள் தங்கள் புதிய வாழ்க்கையை இங்கு ஆரம்பிக்கக் கனடிய அரசு வழங்கும் உதவிகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார் இவர். பலவின பல்கலாசார சேவைகளுக்கென நிதியுதவி வழங்குவதால் கனடியர்களிடையே பிளவு ஏற்படுகின்றது ( Multicultural cash divides us: Mayor - National Post, March 06, 2008) என்று நாஷனல் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது. புதிய குடிவரவாளர் சேவைக்காக அவர்கள் சார்ந்த சமூக/இன அமைப்புகளுக்குப் பெருமளவிலான நிதியுதவியை கனடிய அரசு வழங்குவதை இவர் கண்டித்துள்ளார். மிசிசாகாவை உள்ளடக்கிய பீல் பிரதேசம், 48 வீதம் குடிவரவாளர்களைக் கொண்டது. இவர்களுக்கான சேவைகளுக்கு மிசிசாகா நகரசபை போதியளவு நிதியுதவி வயங்குவதில்லை என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாக இருந்து வருகின்றது. இந்த நிலைமையில், மத்திய அரசு வழங்குகின்ற நிதியுவிக்கு எதிராக இவர் கொடுத்திருக்கும் குரல், பலரையும் அதிர்ச்சி கலந்த வேதனைக்குள்ளாக்கி இருக்கிறது. கவார்த்தா பைன் றிஜ் மாவட்ட கல்விச் சபை உறுப்பினர் கோர்டன் கில்கிறஸ்ற், 'அடையாளம் தெரியும் சிறுபான்மையினத்தவரான குடிவரவாளர்கள் இனத்துவேசக்காரர்' என்று தெரிவித்த கூற்று ஒன்ராறியோ மாகாண சபை வரை ஒலித்துள்ளது. மாகாண சபை உறுப்பினர் பீட்டர் ரபுன்ஸ் இக்கூற்றை வன்மையாகக் கண்டித்துள்ளார். கோர்டன் பதவி விலக வேண்டுமென்று மேற்படி கல்விச் சபையின் மற்றைய உறுப்பினர்கள் கேட்டுள்ளனர். மக்களின் பிரதிநிதிகளே இனத்துவேச கருத்துகளை வெளியிடுவது ஆபத்தை ஏற்படுத்தவல்லது. வேலியே பயிரை மேயலாமா?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Anton Kanagasooriyar
Quintus Thuraisingam

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கு இடைத்தேர்தல்கள்

## மூன்றில் லிபரலுக்கு வெற்றி; தோல்வியும் லிபரலுக்கே!

கடந்த மாதம் (மார்ச்) 17 திகதி கனடாவின் நான்கு தொகுதிகளில் நாடாளுமன்றத்துக்கான இடைத் தேர்தல் நடைபெற்றது. இதில், ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள ரொறன்ரோ மத்தி, விலோடேல் தொகுதிகளிலும், பிரிட்டிஷ் கொலம்பியா தொகுதியிலும் மத்திய லிபரல் கட்சி வெற்றி பெற்றது. ஆனால், சச்கச்சுவான் மாநிலத் தொகுதியில் ஆளும் கன்சர்வேடிவ் வென்றது..

ரொறன்ரோ மத்திய தொகுதி, விலோடேல் ஆகிய இரண்டு தொகுதிகளும் லிபரலின் கோட்டைகள். முறையே முன்னாள் அமைச்சர்களான பில் கிரஹாம், ஜிம் பீட்டர்சன் ஆகிய இருவரும் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இவ்விரு தொகுதிகளையும் மிகக்கூடிய பெரும்பான்மையுடன் தம்வசம் வைத்திருந்தனர்.

இவ்விரு தொகுதிகளிலும் லிபரல் எவரை நிறுத்தியிருந்தாலும் அவர் வெற்றி பெறமுடியும். இரண்டாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற லிபரலின் தலைமைப் போட்டியில், தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட பொப் றே, மார்தா பின்லே ஆகியோருக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கும் வகையில் இவர்களை முறையே ரொறன்ரோ மத்தி, விலோடேல் தொகுதிகளில் நியமித்தார் கட்சித் தலைவர் டியோன்.

பொப் றே 14,187 வாக்குகளும், மார்தா பின்லே 13,524 வாக்குகளும் பெற்று தத்தம் தொகுதிகளில் வென்றனர்.

பெப் றே வென்ற தொகுதியை முன்னர் வைத்திருந்த பில் கிரஹாம் 2006 ஆண்டுத் தேர்தலில் சுமார் 20,000 மஜோரிட்டியாலும், மார்தா ஹோல் வென்ற தொகுதியை முன்னர் பிரதிநிதித்துவம் செய்த ஜிம் பீட்டர்சன் 2006 ஆண்டுத் தேர்தலில் 14,000 மஜோரிட்டியாலும் வெற்றி பெற்றதை நோக்கினால், லிபரலின் இன்றைய பின்னடைவு புரியும்.

சச்கச்சுவான் தொகுதியை லிபரல் மிகவும் நம்பியிருந்தது. ஆனால், கன்சர்வேடிவ்விடம் கோட்டைவிட நேர்ந்தது. பிரிட்டிஷ் கொலம்பியா தொகுதியில் லிபரல் வெற்றியீட்டியது.

நான்கில் மூன்று என்பது புள்ளிவிபர கணக்கு வெற்றி. ஆனால் வாக்காளர் செல்வாக்கில் லிபரலுக்குத் தோல்வியே!

## ஹாப்பர் அரசு முன்வைத்துள்ள புதிய குடிவரவு, அகதிகள் சட்டம்

### வரவு செலவு வாக்கெடுப்புடன் நிறைவேற்றத் திட்டம்

ஸ்டீபன் ஹாப்பரின் கன்சர்வேடிவ் சிறுபான்மை அரசாங்கம் தனது இரண்டு வருட கால ஆட்சியின் முடிவில், முற்றிலும் புதியதான குடிவரவுச் சட்டமொன்றினைத் தயாரித்துள்ளது. மார்ச் மாத நடுப்பகுதியில் இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

குடும்பங்கள் மீள இணைவுக்கு விண்ணப்பிப்பவர்கள், வேலைக்குத் தகுதி பெற்று வருபவர்கள், வர்த்தக இலக்குடன் போதிய டாலர்களோடு வருபவர்கள் ஆகியோருக்குப் புதிய திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. ஆனால், நடைமுறையில் இதன் சாத்தியம் பற்றி ஆருடம் கூற முடியாது.

புதிய வரவு செலவுத் திட்டத்துக்கு இணைவாக புதிய குடிவரவுச் சட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், கனடிய தொழிற் சந்தைக்குத் தேவையானவர்களைத் தெரிந்து விசா வழங்க இது உதவுமென்றும் பிரஜாவுரிமைகள் குடிவரவு அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், புதிய குடிவரவுச் சட்டம் கன்சர்வேடிவ் அரசின் கொள்கைகளுக்கு ஏற்ப குடிவரவாளர்களைத் தெரிந்தெடுக்க மட்டுமே உதவுமென்று எதிர்க்கட்சியினர் சாடியுள்ளனர்.

புதிய வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்புடன் சேர்த்து குடிவரவுச் சட்ட வாக்கெடுப்பையும் நடத்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"இவ்வாறு செய்வதில் ஏதோ கபடத்தனம் உள்ளது" என்று என். டி. பி கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கனடாவின் முதலாவது குடிவரவுச் சட்டம் 1950களில் உருவாக்கப்பட்டது. இதில் பல தடவைகள் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டது.


1989 ஜனவரி முதலாம் திகதி புதிய அகதிகள் விசாரணைச் சபைத் திட்டம் அமுலுக்கு வந்தது. ஒவ்வொரு அகதியும் விசாரணைச் சபையால் விசாரிக்கப்பட்டு ஏற்கப்பட்டால் மட்டுமே 'லாண்டிங்'கிற்கு விண்ணப்பிக்க முடியுமென்ற நடைமுறை இதனால் ஏற்பட்டது.

ஜோன் கிரட்சியனின் லிபரல் ஆட்சிக் காலத்தில் ஸ்பொன்சர் முறையில் சட்டத் திருத்தம் என்ற பெயரில் பல கெடுபிடிகள் கொண்டுவரப்பட்டன. பிள்ளைகள் 18 வயதுக்கு மேற்பட்டிருந்தால் அவர்கள் திருமணமானவர்களாயின், அவர்களை ஸ்பொன்சர் செய்வது நீக்கப்பட்டது.

சுயமாக வர விண்ணப்பம் செய்பவர்களுக்குப் புள்ளிகள் முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது இதே காலத்தில் தான். அகதிகள் வரவில் வெட்டு, அகதிக் கோரிக்கையாளர் நிராகரிப்பு அதிகரிப்பு, குடும்ப இணைவுக் காலம் இழுத்தடிப்பு என்று பல வழிகளிலும் இக்காலத்தில் அசௌகரியங்கள் ஏற்படுத்தப்பட்டன.

2002 ஆண்டில், 'லான்டட்' பத்திரத்துக்குப் பதிலாக, நிரந்தரக் குடிவரவாளர் அட்டை (Permanent Resident Card) அறிமுகத்துடன் குடிவரவுச் சட்டத்தில் மேலும் மாற்றம் வந்தது. ஐம்பது டாலர் கட்டணத்துக்கு வழங்கப்படும் இந்த அட்டை ஐந்தாண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகுமாதலால், இதனால் அரசுக்கு மேலதிக வருமானம் கிடைத்தது.

இப்போது எந்த முன்னறிவிப்புமின்றி புதிய குடிவரவுச் சட்டமொன்றை ஹாப்பர் அரசு தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. முன்னைய அரசுகள் செய்ததுபோன்று, குடிவரவாளர்/அகதிகள் விடயத்தில் மேலும் பல கெடுபிடிகள் இதில் இடம்பெறலாமென்ற அச்சத்தை இவை தொடர்பான சேவை நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடிய தின வைபவத்தை முன்னிட்டு
# தமிழர் தகவல் பதினோராவது ஆண்டாக நடத்தும்
# பாடசாலை மாணவர் விவேகப் போட்டி

**முதலாம் பரிசு: தங்கப் பதக்கம்**

அனைத்துக்கும் சரியான விடையளிக்கும் அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**விடைகள் கிடைக்க வேண்டிய இறுதி நாள்:**
**2008 ஜுன் 20 வெள்ளிக்கிழமை**

ஜுலை மாதம் முதலாம் திகதி வரும் கனடா தினத்தை முன்னிட்டு 'தமிழர் தகவல்' வருடாந்தம் நடத்தும் மாணவர் விவேகப் போட்டியில் கனடாவின் எந்தப் பாகத்திலுமுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களும் பங்கு பற்றலாம். விடைகள் மாணவரால் தமிழில் மட்டும் எழுதப்பட வேண்டும். விடையுடன் சேர்த்து மாணவரின் முழுப்பெயர், வயது, கல்வி கற்கும் பாடசாலையின் பெயர், வகுப்பு, வீட்டு முகவரி, வீட்டுத் தொலைபேசி இலக்கம் ஆகியவைகளையும் தவறாது எழுத வேண்டும். போட்டி தொடர்பான கடித/தொலைபேசித் தொடர்புகள் எதுவும் ஏற்கப்படாது.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

**Canada Day Quiz Contest - 2007**
**P.O.Box - 3, Station - F, Toronto, Ontario. M4Y 2L4.**

## போட்டிக்கான கேள்விகள்

1. ஒன்ராறியோ மாகாண அரசு இந்த ஆண்டிலிருந்து பிரகடனப்படுத்திய விடுமுறை நாளின் பெயர் என்ன? இது எந்த மாதத்தில் வரும்?
2. 2008 ஆண்டு தமிழர் தகவல் விருது பெற்றவர்கள் எத்தனை பேர்" அவர்கள் பெயர் என்ன?
3. கனடாவில் அதிக தொகையில் அச்சடிக்கப்பட்டு, அதிக தொகையில் மக்களால் பெறப்பட்டு, வாசகர் தொகையிலும் முன்னணியில் நிற்கும் வாராந்தத் தமிழ்ப் பத்திரிகை எது?
4. ரிவிஜ தொலைக்காட்சி/சி.எம்.ஆர் வானொலிச் சேவை நிறுவனங்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வானொலிச் சேவையின் பெயர் என்ன? இது எந்த மாகாணத்தில் ஒலிபரப்பாகின்றது.
5. கனடிய நாடாளுமன்றத்தின் நான்கு தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் இந்த வருடத்தில் எப்போது நடைபெற்றது. இதில் எந்தெந்தக் கட்சிகள், எத்தனை ஆசனங்களை வென்றன.
6. தற்போது கனடியர்கள் ஜி. எஸ் ரி (GST) வரியாக ஒரு டாலருக்கு எவ்வளவு சதம் செலுத்துகின்றனர்.
7. தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளரின் பெயர் என்ன?
8. ஈழத் தமிழரின் தாயக பூமியான வட-கிழக்கு மாகாணத்தில் எத்தனை நிர்வாக மாவட்டங்கள் உள்ளன? அவற்றின் பெயர் என்ன?
9. கனடியத் தமிழரின் மிகப்பெரிய நூலகத்தின் (தமிழ்) பெயர் என்ன? இது எங்கு அமைந்துள்ளது?
10. தமிழர் தகவலின் முதலாவது இதழ் எந்த வருடம், எந்த மாதம் வெளிவந்தது?
11. ஒன்ராறியோ மாகாண லெப்டினனட் கவர்னரின் பெயர் என்ன? இப்பதவியை ஏற்பதற்கு முன்னர் இவர் என்ன தொழில் புரிந்தார்?
12. கனடிய மத்திய அரசின் கீழ் மட்டும் வரும் முக்கிய இரண்டு அமைச்சுகளின் பெயர்களைக் குறிப்பிடுக?
13. கனடிய தின வைபவம் உத்தியோகபூர்வமாக எந்த மாதம் / எந்தத் திகதியிலிருந்து. எந்த மாதம் / எந்தத் திகதி வரை கொண்டாடப்படும்?
14. கனடாவின் மூன்று பிரதேசங்களின் (Territories) பெயர்களையும் குறிப்பிடுக?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய சமூகம் நலமிக்க ஒரு சமூகமாக விளங்க வேண்டும். இன்றைய அரசியல் பூகம்பங்களுக்கிடையே, அன்றாடம் உயிரையே அடகு வைத்த நிலையிலே, நாளாந்தம் வயிற்றினைக் கழுவுதற்கே போதுமான கூழோ கஞ்சியோ குடிப்பதற்கும் நாதியற்ற நிலையிலே, தெரிந்தோ தெரியாமலோ கர்ப்பவதிகளாகி விட்ட நம் தாயாகப் போகும் பெண்களால் நலமான சமூகத்தை உருவாக்குவதற்கு வேண்டிய நல்ல ஆரோக்கியமான குழந்தைகளைப் பெற்றுத் தரமுடியுமா?

கருப்பையிலே குடியிருக்கும் அந்தக் குழந்தை 280 நாட்களில் வெளியே வந்து இந்த உலகினைக் காண்பதற்கு முன்னர் அதனை ஊட்டி வளர்த்தது யார்? தன்னையே உருக்கி தன் கருப்பையில் உள்ளே பதிந்த முட்டை சிறிது சிறிதாக வளர வளர தொப்பூள் கொடி மூலமாக அந்தத் தாய்தான் வஞ்சகம் இல்லாமல் வழங்கி வந்தாள். பானையில் இருந்தால் தானே அகப்பையில் வருமென்பது பழமொழி. அண்மையில் கிடைத்த புள்ளி விபரப்படி வட மற்றும் கிழக்கு ஸ்ரீலங்காவில் உள்ள 10,000 கர்ப்பிணிகளில் 3,000 பேர் மிகவும் குறைந்த போஷாக்கு உடையவர்களாகவே உள்ளனராம்.

அப்படி என்றால் கர்ப்பம் தரித்துள்ள பெண்களிலே மூன்றில் ஒரு பகுதியினர் குறை போஷாக்கு நிலையில் உள்ளவர்கள். இவர்கள் மூலம் பிறக்கப் போகும் குழந்தைகள், அவர்கள் தான் எமது நாளைய சமுதாயத்தினை நடத்தப் போகிறவர்கள். ஆகவே, நாளைய சமூகத்தின் மூன்றில் ஒரு பிரஜைகள் நலம் குன்றியவராய் வரவுள்ளார்கள். இதனால் எமது சமூகமே பாதிப்படையப் போவதை உணரலாம்.

இது தவிர்க்க முடியாததா? தவிர்க்கக் கூடியது என்பது அப்பழுக்கற்ற உண்மை. எப்படித் தவிர்ப்பதாம்? இதனையே IMHO (International Medical Health Organisation) (அனைத்துலக மருத்துவ உடலநலத்துக்கான அமைப்பு) முன் எடுத்துச் செய்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள உடநலத்துறை இயக்குனருடன் இணைத்து IMHO அங்கே உள்ள குறை போஷாக்கு உணவுக் கர்ப்பிணிகளுக்கு உதவும்

# தாயக உறவுகளின் நலம் காப்போம்

முயற்சியில் ஈடுபட்டுள்ளது. குறை போஷாக்குக் கர்ப்பிணிப் பெண் ஒருவருக்கு மிகக் குறைந்த அளவு மாதந்தத் தேவை ஒரு பாக்கெற் மாப்பவுடர், 30 பல்லின வைற்றமின்கள் மற்றும் ஒரு போத்தல் புறெற்றினெக்ஸ் ஆகியவையே. பூ இது தானா? என உங்களில் அநேகர் ஆச்சரியப்படுவீர்கள். இந்நாட்டிலே வாழ்வதற்கு ஏதோ விதத்திலே நாம் அதிருஷ்டம் செய்திருக்க வேணும்.

இந்நாட்டில் வாழும் அத்தனை குடிமக்களின் நலத்தினைப் பேணும் அரசும், ஒவ்வொரு குடிமகனினது நலத்தையும் காத்திடும் மருந்துவத் துறையும் அங்கு வாழ் நமது உடன் பிறப்புகளுக்கு கனவிலும் எட்ட முடியாத வரப்பிரசாதங்கள். தன்கையே தனக்கு உதவி என வாழ்வியல் தேவைகளை ஈடுசெய்வதற்கே அல்லல் படுகின்ற அவர்கள் இந்த மேலதிக செலவினை எப்படி ஏற்பார்கள். இதற்கான செலவு எவ்வளவு? ஸ்ரீலங்காக் காசு ரூபா 1400-00. கனடிய பணமாயின் வெறும் $14-00 மாத்திரமே. ஆனால் இந்தச் சிறு தொகையினை மாதாந்தம் செலவழிக்கின்ற நிலையில் அந்தக் கரப்பிணிகளின் குடும்ப நிலை இடம் கொடுக்க மாட்டேன் என்கிறதே.

IMHO இக்கர்ப்பிணிகளில் நல்வாழ்வை உறுதிப் படுத்த முன்வந்துள்ளது. அவர்களுக்குக் கர்ப்பம் தரித்த 4வது மாதம் தொடக்கம் 10வது மாதம் வரை போஷாக்குச் சத்து நல்கக் கூடிய குறை நிரப்பு உணவுகளை வழங்க முன்வந்துள்ளது.

எனவே, ஒவ்வொரு கர்ப்பிணி பெண்ணிற்கும் 6 மாதங்கள் தொடர்ந்து உதவி வழங்குதற்குத் தேவையான பணம் $ 84 (14 X 6). மொத்தமாக உள்ள உதவி தேவையான 3000 கர்ப்பிணிப் பெண்களுக்குத் வருடம் ஒன்றினுக்குத் தேவையான பணம் $252,000.00 ஆகும். இந்த நிறுவனம் இதில் ஒரு பகுதியினை வழங்கியுள்ளது. CHA என அழைக்கப் படும் Consortium of Humanitarian agencies (மனிதாபிமான முகவரகங்களின் குழுமம்) குறைநிரப்புப் போஷணைகளை (Nutritional supplements) விலைக்கு வாங்கி யாழப்பாணத்திற்கு அனுப்புகிறது. அதனை அங்கே உள்ள உடநல மருத்துவ அலுகவலகங்கள் தாதிமார்கள் மூலமாக விநியோகிக்கிறது.

IMHO நான்கு வருடங்களுக்கு முன்னர் USA யினது மனிதாபமிக்க சில மருத்துவர்களால் தொடங்கப் பட்டது. வைத்திய கலாநிதி ரகுராஜ் தலைமையில் உள்ள இந்த அமைப்பு பாரிய பல முயற்சிகளை இந்தக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. இது நாள் வரை U$ 11 இலட்சத்தினுக்கான இதயவியல், சிறுநீரியியல், என்பு மூட்டியல், புற்றுநோய் மருத்துவம், கண், நாசி, தொண்டை மருத்துவம், மற்றும் உதரகுடலியல் சம்பந்தமான பல துறைகளிலும் இரண்டாம் நிலைப்பாதுகாப்பினில் கால் பதித்து அளப்பரிய சேவை ஆற்றியுள்ளமை எம்மை எல்லாம் வியக்க வைத்துள்ளது.

கனடா வாழ் தமிழ் மக்களும் இந்த நன்முயற்சியில் தீவிரமான ஆதரவு காட்ட முன் வந்ததில் எந்த விதமான ஆச்சரியமும் இல்லை. தாயக மக்களின் நல்வாழ்வு, அவர்களின் சுபிட்சம் என எந்நாளும் சிந்தித்தபடி இருக்கின்ற கனடிய தமிழ்ச் சமூகம் இச்சீரிய தொண்டில் தம் பங்கு என்ன என உரிமையுடன் கேட்டு தேவையானவற்றினை மூர்க்கமாகச் செய்ய விழைகின்றது. இதன் விளைவே ஏப்ரல் 5ந் தேதி இரவு 7:00 மணிக்கு அற்லான்ரா கல்யாண மண்டபத்தில் நடைபெறுகின்ற செயல் திட்ட விளக்கக் கூட்டம். $50,000 சேகரிக்கலாம் என்ற அபிலாசையுடன் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த, இரவு உணவுடன் கூடிய செயல் திட்ட விளக்கக் கூட்டத்தில் நம்மவர்கள் பங்கு பற்றி அவர்களின் கனவினை நனவாக்குவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு நிறையவே உண்டு.

நலம் காப்போம். நம்மவர்களைப் பேணுவோம். நற்பணியில் ஈடுபடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணி வேலுப்பிள்ளை
எழுதும் புதிய தொடர் -02

# ஒரு சொல் பல பொருள் கோவை

**ENGLISH - தமிழ்**

12. a fight **against** aggression = வலிந்த தாக்குதலுக்கு எதிரான ஒரு போராட்டம்
Put the fan **against** the wall = மின்விசிறியைச் சுவரை அண்டி வை
an injection **against** rabies = வெறிநாய்க்கடிநோய் தடுப்பூசி
insurance **against** theft = திருட்டினை ஈடுசெய்வதற்கான காப்புறுதி
romance **against** the background of war = போர்ச் சூழலில் ஒரு காதலூடாட்டம்
weigh the benefits **against** the cost = செலவுடன் நன்மைகளை ஒப்புநோக்கு

13. Dad feels his **age** = அப்பா தனக்கு வயது போவதை உணர்கிறார்
The dictator died of old **age** = அச்சர்வாதிகாரி வயது முற்றி மாண்டார்
act your **age** = உன் வயதுக்கு ஏற்றபடி நட
come of **age** = பருவமடை = உரிய வயதை அடை
**age** of consent = உடலுறவுக்கு உடன்படக்கூடிய வயது

14. foreign **aid** = வெளிநாட்டு உதவி
teacing **aids** = கற்பிக்க உதவும் சாதனங்கள்
in **aid** of the proposed library = உத்தேச நூலகத்துக்குப் பொருளுதவி நாடி

15. with the **aim** of doing a research = ஓர் ஆராய்ச்சி செய்யும் நோக்குடன்
take **aim** and fire = இலக்கு வைத்துச் சுடு = குறி பார்த்துச் சுடு
**aims** and objectives = இலக்குகளும் நோக்குகளும்
**aim** high = அதிகம் சாதிக்க முயலு
**aim** at that bird = அந்தப் பறவைக்கு இலக்கு வை
I did not **aim** my criticism at you = நான் உன்னைக் குறித்துக் கண்டனம் தெரிவிக்கவில்லை

16. **air** fare = வானூர்திக் கட்டணம் = விமானக் கட்டணம்
**air** your grievances = உன் உள்ளக்குறைகளை எடுத்துரை
**airs** and graces = எடுப்புச் சாய்ப்புகள்
country with an **air** of tolerance = சகிப்புணர்வு நிலவும் நாடு
float/walk on **air** = மகிழ்ச்சியில் மித (திளை)
fresh **air** = தூய காற்று
off (the) **air** = ஒலிபரப்பிலிருந்து விடுபட்டிரு
on (the) **air** = ஒலிபரப்பில் ஈடுபட்டிரு
put on **airs** = எடுப்புச் சாய்ப்புக் காட்டு
up in the **air** = இன்னும் முடிவெடுக்கப்படாத நிலையில்

17. **alien** beings = வேற்றுலகப் பிறவிகள்
**alien** culture = வேற்றினப் பண்பாடு
illegal **alien** = சட்டவிரோதமாகக் குடிபுகுந்த வேற்றுநாட்டவர்
Your idea is **alien** to our culure = உனது எண்ணம் எங்கள் பண்பாட்டுக்கு ஒவ்வாது

18. set the weeds **alight** = களையைக் கொளுத்து
The pigeon may **alight** on your head = புறா உன் தலையில் அமரக்கூடும்
**alight** from the car = காரிலிருந்து இறங்கு
My eyes **alighted** on the vermilion = எனது பார்வை குங்குமத்தில் பதிந்தது

19. stay **alive** = உயிர்தப்பி வாழ்
My grandfather is **alive** and kicking = என் பாட்டனார் சுறுசுறுப்பாக நடமாடித் திரிகிறார்
The city starts to come **alive** after dark = இருட்டிய பின்னர் மாநகரம் களை கட்டத் தொடங்கும்

20. **allied** forces = நேச நாடுகளின் படைகள்
skills **allied** with technical knowledge = தொழினுட்ப அறிவுடன் கூடிய திறன்கள்
medical and **allied** professions = மருத்துவத் துறையும் அதனுடன் இணைந்த துறைகளும்

21. **allow** the child to play = பிள்ளையை விளையாட விடு
Don't **allow** smoking inside = உள்ளே புகைக்க அனுமதிக்காதே
an hour, **allowing** for traffic delays = பயண தாமதம் உட்பட, ஒரு மணித்தியாலம்
The facts allow of only one explanation = நிகழ்வரங்களின்படி ஒரே ஒரு விளக்கமே கைகூடும்

22. living **allowance** = வாழ்க்கைப் படி
make **allowance(s)** for inflation = விலையேற்றத்தையும் கருத்தில் கொள்ளு
make **allownace(s)** for seniors = முதியோருக்கு விட்டுக்கொடு

23. Don't eat **alone** = தனியே உண்ண வேண்டாம்
Leave me **alone** = என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்
Leave the table **alone** = மேசையில் கைவைக்க வேண்டாம் (தொட வேண்டாம்/முட்ட வேண்டாம்)
Our people can stand **alone** = எமது மக்களால் தமது கால்களில் நிற்க முடியும்
There isn't enough room for us, let **alone** any guests! = எங்களுக்கே இடம் பற்றாது, விருந்தினர் எவர்க்காவது இடம் கிடைப்பதாவது!

24. **along** the street = தெரு வழியே
I'll be **along** in a few minutes = நான் ஒருசில நிமிடங்களுள் உங்களுடன் சேர்ந்து கொள்வேன்
This plant is coming **along** nicely = இச்செடி செவ்வனே வளர்கிறது

25. the **animal** kingdom = விலங்கினம்
**animal** magnetism = கவர்ச்சி
dumb **animal** = வாயில்லாப் பிராணி = வாய்பேசாப் பிராணி
higher **animals** = விருத்தியுற்ற விலங்குகள்

தொடர்ந்து வரும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sathya Sai School - Ontario's Best Elementary School
# சத்திய சாயி பாடசாலை
## ஒன்ராறியோவின் அதிசிறந்த கீழ்ப் பிரிவு பாடசாலை

ரொறன்ரோவில் செப்டம்பர் 2, 2000ல் ஆரம்பிக்கப்பட்ட சத்திய சாயி பாடசாலையைப் பற்றி அறியாதவர் எம் மத்தியில் இருக்க முடியாது. ஏற்கனவே தாய்லாந்து, சம்பியா, நியூசிலாந்து மற்றும் இந்தியாவின் பல பகுதிகளிலும் சத்திய சாயி பாடசாலைகள் காணப்படுகின்றன. வட அமெரிக்காவிலேயே முதன் முதலாக ஒரு பாடசாலையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை சுவாமி சத்திய சாயி பாபா 2000 ஆண்டில் வழங்கினார். அதன் பயனாக ஆரம்பிக்கப்பட்டதே இப்பாடசாலையாகும்.

இன்று ரொறன்ரோவிலுள்ள 3, 6 வகுப்புகளில் மாகாண ரீதியாக நடைபெறும் EQAO பரீட்சைகள் (Education, Quality + Accountability Office) ஒரு பாடசாலையின் கல்வித் தரத்தை அளவீடு செய்வதற்கு ஒரு முக்கிய அளவுகோலாக அமைகிறது. The Frazer Institute என்ற ஆராய்ச்சி நிறுவனம் "Report Card on Ontario's Elementary Schools" என்ற ஒரு ஆராய்ச்சி அறிக்கையை February 11, 2007ல் வெளியிட்டது. இவர்களின் ஆய்வில் 2812 ஆங்கில, பிரெஞ்சு, அரச, பிரத்தியேகப் பாடசாலைகள் இந்த EQAO பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டன. இதில் 37 பாடசாலைகள் முதல் இடத்திற்கு உரியவையாகத் தெரிவு செய்யப்பட்டன. Overall rating of 10 points ஐ பெற்று முதல் இடத்தைக் கைப்பற்றிய பாடசாலைகளில் சத்திய சாயி பாடசாலையும் ஒன்றாகும். இப்பாடசாலையின் கல்வித்தரத்தை அளவீடு செய்வதற்கு இதனைவிட வேறு ஒரு அத்தாட்சியும் தேவையில்லை. (இவ் வருடமும் 100% மாணவர்கள் 6, 3 வகுப்பு EQAO பரீட்சையில் சித்தி எய்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.)

சத்திய சாயி பாடசாலை கல்விக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுப்பதையே தனது நோக்கமாகக் கொள்ளாது பெறுமானம் அடிப்படைக் கல்விக்கே (value based education) முக்கியத்துவம் கொடுப்பதை தனது தூண்களில் ஒன்றாகக் கருதுகிறது. அதற்கமைய இப்பாடசாலையின் மேற்கோள் வாசகமாக (Motto) "நன்நடத்தையே கல்வியின் அந்திமம்" எனக் கொண்டுள்ளது. (The end of education is Character). இந்தக் குறிக்கோளை அடைவது அவ்வளவு சுலபமான விடயம் அல்ல என்பதனை நாமெல்லோரும் அறிவோம். பாடசாலையால் இதனைத் தனியாக அடைய முடியாது. இதற்குப் பெற்றோரின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது. ஆகவே பெற்றோருக்கு "பெறுமானமுள்ள பெற்றோரியம்" - (Value parenting) பற்றிய கருத்தரங்குகள் பிள்ளைகள் பாடசாலையில் அனுமதிக்கப்பட்ட முதல் வாரத்திலேயே கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 15 கிழமைகள் இப்பட்டறையை தகுதி வாய்ந்த நிபுணர்கள் தொண்டர் சேவையாக நடத்துகின்றனர்.

இப்பாடசாலையை Sathya Sai Education Trust of Canda நடத்துகிறது. இங்கு பாலர் கீழ்ப் பிரிவு தொடக்கம் 6 வகுப்பு வரை காணப்படுகிறது. (JK-Grade 6). கிட்டத்தட்ட 160 மாணவ, மாணவிகள் இங்கு கல்வி கற்கின்றனர். பல்கலாசார மாணவர்களுக்கு இங்கு அனுமதி வழங்கப்பட்ட பொழுதும் 90% மாணவர்கள் இலங்கையராகவே உள்ளனர். இங்கு பாலர் வகுப்புக்கு மாத்திரமே புதிதாக மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் பாலர் வகுப்புக்கு 20 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். பாலர் வகுப்பு மேற்பிரிவிலிருந்து 6 வகுப்பு வரை யாராவது பிள்ளைகள் விலகிச் செல்லும் பொழுது ஏற்படும் இடைவெளிக்கு மாத்திரம் புதிதாக மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். இதனை ஒரு செயல் நிறைவேற்றுப் பரீட்சை மூலமே (Performance Test) நிர்ணயிக்கிறார்கள். பாலர் பிரிவிற்கான அனுமதி ஏப்ரல் மாதத்தில் நடைபெறுகிறது. தனித் தனியாகப் பெற்றோரும், பிள்ளையும்



**கனகேஸ்வரி நடராஜா**
ஆசிரியர், இலங்கை-கனடா

நேர்முகப் பரீட்சையை கையாள வேண்டியுள்ளது. அனுமதிக்கான முடிவினை எடுப்பது அனுமதிக்கு பொறுப்பான குழுவாகும் (Admission Committee). சுவாமி கல்விப் போதனை என்பது ஒரு வியாபார நோக்கு உடையதாக அமையக் கூடாது எனக் கூறியுள்ளார் (Education should not be commercialised). ஆகவே ஏனைய பிரத்தியேகப் பாடசாலைகளில் காணப்படுவது போல் இங்கு கல்வி கற்பதற்கான கட்டணம் எதுவும் அறவிடப்படுவதில்லை.

இங்கு ஒன்ராறியோ மாகாணக் கல்விச் சபையின் கலைத்திட்டமே போதிக்கப்படுகிறது. அத்துடன் மனித மேம்பாட்டு பெறுமானங்களையும் (Human values) கலைத்திட்டம் சார்ந்த, கலைத்திட்டம் சாராத விடயங்களில் உள்ளடக்கியுள்ளது. மனித மேம்பாட்டு கல்விக்கான ஐந்து பெறுமானங்களாகிய உண்மை, நன்நடத்தை, சாந்தி, பிரேமை, அகிம்சை (Truth, Right Conduct, Peace, Love + Non-violence) ஆகியவற்றை இக் கலைத்திட்டத்துடன் ஒன்றிணைத்துள்ளனர். இத்தகைய ஒரு கலைத்திட்டத்தை மாணவர்கள் பின்பற்றுவதால் இவர்கள் கல்வியில் சிறப்புற்று விளங்குவதோடு, சமூகத்திலும் பொறுப்பானவர்களாகவும், சன்மார்க்க முதிர்ச்சி உடையவர்களாகவும், சகல அம்சங்கள் நிறைந்தவர்களாகவும் விளங்க வாய்ப்புண்டு. (Academically excellent, socially responsible, ethically mature & well rounded students). இங்கு வகுப்புக்கள் காலை 8.15 இற்கு ஆரம்பிக்கப்பட்டவுடன் வகுப்பு நேர சூசியில் 8.25 தொடக்கம் 9.05 வரை தியானம் (Light meditation) வகுப்பு அறைகளிலேயே ஆசிரியரின் வழிநடத்தலில் நடைபெறுகிறது. இவ்வாறு தங்கள் பாடசாலை நாளை ஆரம்பிப்பதால் அன்றைய பொழுது முழுவதும் மாணவர்கள் மனச் சாந்தியுடனும், மனப்பக்குவத்துடனும் விளங்குகின்றார்கள். பின்னேரத்தில் யோகா வகுப்புகளும் நடைபெறுகின்றன. இதற்கென ஒரு பிரத்தியேக ஆசிரியர் காணப்படுகின்றார். JK-G6 வரை ஒவ்வொரு வகுப்பிற்கும் பொறுப்பாக ஒரு ஆசிரியர் இருப்பதோடு மேலதிகமாகப் பிரெஞ்சு மொழி கற்பிப்பதற்காக ஒரு ஆசிரியரும், உதவி ஆசிரியரும் காணப்படுகிறார்கள். 2000 செப்டம்பரில் இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது இதன் அதிபராக ரி. ஆர். பிள்ளை நியமிக்கப்பட்டார். தற்பொழுது இதன் அதிபராக Revathi Chennabathni - Ph.D-Ed, M.Phil, M.Ed - கடமையாற்றுகிறார். அதிபர் மாத்திரமன்றி, சக ஆசிரியர்கள் மற்றும் இங்குள்ள ஊழியர்கள் எல்லோரும், இப்பாடசாலையில் கடமை புரிவதை ஒரு தொழிலாகக் கருதாது, பகவானுக்கும், சமூகத்துக்கும் செய்யும் தொண்டாகவே கருதுகிறார்கள். இப் பாடசாலையின் முதுகு எலும்பாக விளங்குபவர்கள் இங்கு தொண்டர் சேவையாற்றும் பலராகும். இவர்கள் பாடசாலையின் சகல தொழிற்பாடுகளிலும் மிகவும் உற்சாகத்துடனும், பயபக்தியுடனும் சுவாமியின் சேவையாகக் கருதி இதில் ஈடுபட்டுள்ளனர்.

எந்த ஒரு பாடசாலையிலும் காணப்படாத ஒரு விசேட அம்சம் இங்கு காணப்படுகிறது. அது இவர்கள் நடத்தும் நடைபவனியாகும். பொதுவாக நடைபவனிகள் ஒரு தர்ம கைங்கரியத்திற்கு நிதி சேகரிப்பதற்காகவே நடைபெறுவதுண்டு. ஆனால் இவர்கள் நடத்தும் நடைபவனியானது பெறுமானங்களுக்காகவே (Values) மேற்கொள்ளப்படுகிறது. அதாவது சுவாமியால் போதிக்கப்படும் நற்போதனைகளை சமூகத்தவர்களின் மத்தியில் எடுத்துச் செல்ல இந் நடைபவனி உதவுகிறது. இதனைப் பாடசாலைப் பெற்றோர் சங்கமே முன்னின்று நடத்துகின்றது. முன்பு ஸ்காபரோவில் மாத்திரம் நடைபெற்ற இந் நடைபவனி இப்பொழுது ரொறன்ரோ மையப் பகுதி →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிநாயகர் கந்தவனம் தரும்

## கனடியக் காட்சிகள்

# தமிழ்மொழிக் கிழமை

அடுத்த மாதம் கனடாவிற் கொண்டாடப்படவுள்ள தமிழ்மொழிக் கிழமை குறித்து நாம் அறியவேண்டியதும் அறிந்து நடைமுறைப்படுத்த வேண்டியதுமான சில தகவல்கள்:

1. நாம் தமிழர்.
2. நமது மொழி தமிழ்மொழி.
3. தமிழ் எங்கள் உயிருக்கும் மேலானது.
4. தமிழ்மொழி உலகத்துத் தொன்மையான மொழிகளில் ஒன்று.
5. தொன்மையான இலத்தீன், பாளி, சமக்கிருதம் போன்ற பல மொழிகள் பேச்சு வழக்கு இழந்துவிடவும் . தமிழ்மொழி இன்றும் பல நாடுகளிற் பேசப்படும் சிறபபுடையது.
6. தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழி என்று போற்றப்படுவது.
7. தமிழ்மொழி உலகத்தின் பழைமையான நூல்களைக் கொண்டிருக்கும் மேன்மையுடையது.
8. தமிழ்மொழியின் தொன்மையான நூல் தொல்காப்பியம்.
9. தொல்காப்பியத்திலிருந்து 3000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே தமிழ்மொழி வளம்பெற்ற மொழியாக வளர்ந்துள்ளமையை அறியக்கூடியதாக இருக்கிறது.
10. தமிழ்மொழியின் மற்றுமொரு பழைய நூல் திருக்குறள் ஆகும்.
11. திருக்குறள் 80 பிற மொழிகளில் பெயர்ப்புச் செய்யப்பெற்ற சிறப்புடையது.
12. பழந்தமிழ் நூல்கள் நமது முன்னோர்களின் வாழ்க்கை முறைகளையும் அவர்கள் கட்டி வளர்த்த பண்பாட்டுக் கோலங்களையும் விளக்குகின்றன.
13. தமிழ்மொழியின் சிறப்பையும் தமிழ்மக்களின் பெருமையையும் அறிவதற்கு நாம் தமிழ்மொழியைக் கற்றல் வேண்டும்.
14. தமிழ்மொழியைக் கற்றல் எமது பிறப்புரிமை.
15. தமிழ்மொழியை எமது பிள்ளைகளுக்குக் கற்பித்தல் எமது கடமை.
16. தமிழ்மொழியைக் கற்பது, கற்பிப்பது கடினமன்று.
17. தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்கள் பன்னிரண்டும் மெய்யெழுத்துக்கள் பதினெட்டுமாக மொத்தம் முப்பது எழுத்துக்கள் மட்டுமே உள்ளன.
18. ஆங்கிலத்திலேதான் சிறிய எழுத்துகள், பெரிய எழுத்துகள் என்று அதிக எழுத்துகள் உள்ளன.
19. தமிழைப் படிப்பதனால் பிள்ளைகள் ஆங்கிலத்தில் பின்னடைகிறார்கள் என்ற கூற்றுத் தவறானது.
20. பெற்ற தாயில் பற்றுடையவர்களாக இருத்தல்போலவே தாய்வழி மொழியிலும் நாம் பற்றுடையவர்களாக இருத்தல் வேண்டும்.
21. தமிழ்ப் புலப்பெயர்வு தமிழ் மொழிப் பெயர்வு ஆகாது.
22. தமிழ் இனத்தின் தலையாய அடையாளம் தமிழ்மொழி அறிவேயாகும்.
23. தமிழ்மொழி அறிவு இன்றி நாம் தமிழர் என்று சொல்வதிற் பயனில்லை.
24. தமிழர் என்போர் தத்தம் வீடுகளில் தமிழ்மொழியையே பேசக் கடவர்.
25. தமிழர் தமிழரைக் கண்டால் தமிழ்மொழியிலேயே உரையாடுவர்.

ஏகும் தேசம் எதுவா னாலும்
சாகும் வரையும் தமிழைப் பேசு.

- மணிக்கவிகள், வி. கந்தவனம்

## சத்திய சாயி பாடசாலை

தெருக்களினூடாக (Downtown) நடைபெறுகிறது. பல்லாயிரக் கணக்காக பல்கலாசார மக்கள் இதில் பங்குபற்றுவதைக் காணக் கூடியதாக உள்ளது.

இங்குள்ள மாணவர்கள் ரொறன்ரோவில் மாத்திரம் அல்லாது உலகளாவிய ரீதியிலும் பல சமூக சேவைகளில் ஈடுபட்டுள்ளதைக் காணக் கூடியதாகவுள்ளது. சமூகத்திற்குச் செய்யும் தொண்டுகளாவன: வயோதிபர் இல்லங்களுக்குச் சென்று பண்டிகைக் காலங்களில் பாடல்கள் இசைத்தல், பூங்காக்களை (Parks) துப்பரவு செய்தல், குளிர்காலத்திற்கான உடைகளைச் சேகரித்து ரொறன்ரோவிலுள்ள வீடற்றவர்களுக்கு (Homeless people) வழங்குதல் முதலியவற்றில் ஈடுபட்டுள்ளனர். உலகளாவிய ரீதியில் ஆபிரிக்காவில் குடிநீர் கிணறுகளை அமைத்தல், ஒரு பிள்ளையை தத்து எடுத்தல், (Foster a child), இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ நிதி சேகரித்தல், உலகளாவிய ரீதியில் யுத்த அனர்த்தங்களால் அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுதல் முதலிய தொண்டர் சேவைகளை இவ் இளம் தளிர்கள் பிஞ்சு வயதிலேயே செய்யப் பழகுகிறார்கள். எந்த ஒரு பாட-சாலைக்கும் ஒரு விதத்திலும் சளைத்துப் போகாத வகையில் இவர்களுக்காகப் பலவிதமான குழுக்கள் இங்கு இயங்குகின்றன. கைப்பணி, சங்கீதம், சித்திரம், செஸ், பனி விளையாட்டுகள், பேச்சு வல்லமை (Public speaking), எழுத்துக் கூட்டல் (Spelling bees), இன்னோரன்ன திறன்களை விருத்தி செய்ய இக்குழுக்கள் உதவுகின்றன. இத்துடன் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன. பாடசாலைக்கெனப் பிரத்தியேக பஸ் போக்குவரத்து வசதியும் உண்டு.

ஆறாம் வகுப்பு முடிந்த பின்பு இங்குள்ள மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. இத் தருணத்தில் இவர்கள் வேறு பாடசாலைகளில் சென்று எவ்வாறு ஒழுங்காட்சி (Adjust) செய்கிறார்கள் என்பதனை நோக்குவது சாலச் சிறந்தது. இவர்கள் மிகவும் திறம்படச் செயலாற்றுவதாகவே அறிகிறோம். இவர்களில் ஒருவர் மீள்திறன் வகுப்பிலும் (Gifted), இன்னொருவர் International Bacularate Program இலும் கல்வி கற்கிறார்கள். பழைய மாணவர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு மாதம் ஒரு முறை இவர்கள் சந்திக்கிறார்கள் (Alumini). இதனால் இவர்களுக்குப் பாடசாலையோடு உள்ள தொடர்பு அற்றுப் போகாதிருக்கிறது.

உலகளாவிய ரீதியில் இன்று மாணவர்கள் மத்தியில் ஒழுங்கீனம் காணப்படுகிறது. சிறுவயதிலேயே பிள்ளைகளுக்குக் கல்வி கற்பதற்கான சரியான சூழலை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களின் திறன்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் முறையான வடிகால்களையும் அமைத்துக் கொடுத்துவிட்டால், அதுவே அவர்களுக்கு வேண்டிய மனப்பக்குவத்தையும், மனக்கட்டுப்பாட்டையும், சிறுவயதிலேயே ஏற்படுத்தி விடும். இவ்வாறு செய்வதன் மூலம் வளர்ந்த பின்பும் இவர்கள் எந்த ஒரு விதமான பிழையான நடத்தையிலும் ஈடுபட வாய்ப்பு ஏற்படாது. "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்பது முதுமொழி. ஐந்தில் வளைய வைப்பது பெற்றோர் கடன். அதற்கேற்ற தளத்தை சத்திய சாயி பாடசாலை வழங்குகிறது. ஆயினும் வருடமொன்றிற்கு 20 பிள்ளைகளுக்கே இந்தப் பாக்கியம் கிடைக்கிறது. அத்தகைய பாக்கியசாலிகளாக உங்கள் பிள்ளை இருந்துவிட்டால், நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் - சாயிராம்.

மேலதிக விபரங்களுக்கு - தொலைபேசி - 416-297-7970
www.sathyasaischool.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைமுறைக் கனவு நனவாக தமிழ் ஆலயக் கதவு திறக்கின்றது

தமிழ்மொழி கருத்துப் பரிமாறும் கருவி மட்டுமல்ல பண்பாடும் கலையும் கூடிய கல்வி. அதனை உரியவகையில் இளைய தலைமுறையினருக்கு உணர்த்துவதன் மூலம் எதிர்காலச் சந்ததி தமிழ் மொழி தெரிந்தவர்களாக மட்டுமன்றி தமிழர்களாக வாழும் பெருமையை பெறமுடியும் என்ற கலாராஜனின் அசைக்கமுடியாத நம்பிக்கையின் முதற்பயணம் ஆரம்பமாகிறது.

இங்கே தமிழ் படிக்கலாம்! கலைகளோடு கைகோர்த்து நடக்கலாம் தமிழோடு வாழலாம்!

தமிழ் ஆலயக் கற்பகத்தில் தமிழ் கலை கலாசார பண்பாட்டு பயிற்சி வகுப்புகளுக்கு பதிவு செய்துகொள்ள விரும்புவோரும், தமிழ் ஆலய பெரியோர் சரணாலயத்தில் இணைந்து கொள்ள விரும்புவோரும், 2000ற்கு மேற்பட்ட கலை இலக்கிய ஆன்மீக அறிவியல் நூல்கள் நிறைந்த நூலகத்தில் அங்கத்தவர்களாக பதிவுசெய்து பயன்பெற விரும்புவோரும் பதிந்து கொள்ளலாம்.

பங்குனி 22ம் திகதி முதல் 850 Tapscott Roadல் Unit #47ல் அமைந்துள்ள தமிழ் ஆலய நிலையத்தில் பதிவுகள் இடம்பெறுகின்றன. தலைமுறைக் கடன் முடிப்போம் தமிழ் தாழாமல் தோள்கொடுப்போம் வாரீர்!

## CIBC வங்கி வழங்கும் வலுவிழந்தோர் தொழிற்பயிற்சி!

CIBC வங்கியானது வலுவிழந்தோருக்கு இலவசமாக 6 வாரங்களுக்கான தொழிற்பயிற்சியினை வழங்குகின்றது. பயிற்சியின் பின் தகுதிபெற்றோர் பல்வேறு வகைப்பட்ட தொழில்களை Global Operations அல்லது Intria இல் பெறக் கூடிய வாய்ப்புமுண்டு.

பயிற்சி திங்கள் முதல் வெள்ளி வரை 8:30 - 4:30 வரை நடைபெறும். பயிற்சிக் காலத்தின் போது, சிறுதொகை உதவிப் பணமும் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் www.cibc.com/careers என்னும் இணையத் தளத்திற்குச் சென்று Resume இனை J03008-0499 என்னும் கோப்பு இலக்கத்திற்கு அனுப்பவும்.



பொன்னையா விவேகானந்தன்

**பொன்னின் பொழிகை** தொடர் 14

## வேலி

உள்ளும் புறமுமாய் மாந்தருக்குள் எத்தனை வேலிகள்....

விலங்கைப் போல் மாந்தர் உலவிய காலத்தில் மண்ணிலும் வேலிகள் இருக்கவில்லை மனத்திலும் வேலிகள் இருக்கவில்லை. அம்மணமாய்த் திரிந்தவர் ஆடைக்கான தேவையை உணர்ந்தபோது தான் முளையிட்டிருக்க வேண்டும் முதல் வேலி.

வேட்டையாடித் திரிந்த காலத்தில் வேறுபாடுகளை அடையாளப்படுத்தத் தெரியாத மாந்தன் நாகரிகமுற்ற காலத்தில் வேலிகளையே வாழ்வாக்கிக் கொண்டான்.

இன்று வேலி இன்றி வாழ எந்த மனிதனாலும் முடியுமா?

கணக்கிட்டுப் பார்த்தால், மாந்தரின் எண்ணிக்கையை விட வேலிகளின் எண்ணிக்கை அதிகமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

வகைப்படுத்தப் பார்த்தால் விரிகிறது விழிகள். எத்தனை எத்தனை வேலிகள்.

ஒற்றை இனத்துக்குள் வேலிகளாய் ஆயிரம் வரம்புகள் வரைந்தான்.
வரம்புகளுக்குள் அவரவர் வாழ்வை வரையறை செய்தான்.

காலங்காலமாய் வேலிகளின் அளவையும் வேலிகளுக்குள் வளர்வோரின் இயல்பையும் எங்கோ 'ஏதோ ஒன்றே' முடிவு செய்தது.
அதை அதிகாரம் என்றனர் சிலர். பாதுகாப்பு என்றது அதிகாரம். யாருக்குப் பாதுகாப்பு என்பதைத் தெளிவுபடுத்தாமலே.

தனக்குள் அகப்பட்டவர்களை விட இட்டவர்களுக்கே வேலிகள் அதிக விருந்துகளை வழங்கியிருக்கின்றன.

அவரவர் இயல்புக்கேற்ப எல்லோருமே வேலிகள் வைத்திருக்கின்றனர். எல்லா நிலைகளிலும் அதிகாரம் தன்னை வெளிப்படுத்த வேண்டியிருக்கின்றது. அதற்கு எளிதான வழியாக புதிய வேலிகளை அறிமுகப்படுத்துகின்றது. அந்த வேலிகளை நடைமுறைப்படுத்துவதனூடாக தன் இருப்பைச் சரிபார்த்துக் கொள்கின்றது.

வேலிகளை உருவாக்குகின்ற போது வெற்றி பெறுவதாகக் கருதிக் கொள்ளும் அதிகாரம் அதே வேலிகள் பிடுங்கப்படுகின்றபோது தோல்விகளையே சந்தித்திருக்கின்றது.

வேலிகள் விசித்திரமானவை.
வேலிகளைப் பாதுகாப்பதற்காகவே பல வேலிகள் உருவாகின்றன. வேலிகளை வெறுப்பவர்களைச் சுற்றியும் வேலிகள் போடப்படுகின்றன. வேலிகளுக்கெதிரான போராட்டங்களினால் பிடுங்கப்படும் வேலிகள் வீணாகிவிடுவதில்லை. மீண்டும் வேலிகளாகி விடுகின்றன.

வேலிகளை விட்டு வெளியே செல்ல விரும்புகின்றவனும் தண்டிக்கப்படுகின்றான்.
வேலிகள் கடந்து உள்ளே வர விரும்புகின்றவனும் தண்டிக்கப்படுகின்றான்.

வேலிக்கு வெளியே நின்று எவராலும் வாழ முடிவதில்லை இன்று.

கடந்து உள் இருப்பதனால் கடவுள் எனப்பட்டவரும் வேலிகள் கடந்து வேல் ஊன்ற முடியாது.

எல்லைக்கோடுகள் தெரியாத தூரத்தில் நின்று இந்தப் பூமியைப் பார்க்க ஆசை.

முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசன் எழுதும்
பத்தாம் பக்கம்

# மூட்டைகளுடன் வருகிறார்கள்

உலகெங்குமிருந்து கனடாவிற்குள் அண்மையில் மூட்டைகளுடன் பதுங்கி வருபவர்கள் அதிகரிக்கின்றனர் என்கின்றது செய்தி.

அவர்களது பாமரத்தனத்தை கட்டுப்படுத்த வழி தெரியாது நாகரிகம் கூட நாகரிகமாகச் சொறிந்து கொள்கின்றது.

தமிழர்கள் மட்டும்தான் மூட்டைகளுடன் வருவது என்றில்லை. வெள்ளையர், கறுப்பர், சீனர் என சகலரும் இவ்விதம் வருவதை அற்பம் என்று எண்ணி தவிர்க்க முடியாது தவிக்கின்றது கனடா!

இருளுக்குள் இளைப்பாறும் அவற்றை எந்த விழிகளின் வெளிச்சத்தாலும் இலகுவில் கண்டு பிடிக்க முடிவதில்லை.

2003ம் ஆண்டிற்கு முன் இது ஒரு பிரச்சினையாக உருவாகவில்லை. 2004ல் 194 தொலைபேசி அழைப்புகளும் 2005ல் 147 தொடர்புகளும் 2006ல் 260 புகார்களும் மூட்டைப் பூச்சிகள் (Bed Bugs) வீடுகளில் அவதானிக்கப்பட்டதாக சுகாதார அமைச்சுக்கு தெரிவித்தன.

கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் மூட்டைப் பூச்சிகள் புதியவையல்ல. இரண்டாம் உலகப் போர் காலத்தில் வீட்டுக்கு வீடு மக்களுடன் குடியும் குடித்தனமும் புரிந்திருந்தவை தான்.

சொந்த நாடுகளில் ஒரு விரலால் ரத்தம் கக்க வைத்திருப்பினும் பலருக்கு இங்கு செய்வதறியாது எதிரியுடன் படுக்கும் மன இறுக்கம் உள்ளது.

மூட்டைகளில் 92 வகை உண்டெனினும் 2 வகை மட்டுமே மனிதரை கடிக்கும்.தலைப்பகுதியில் உள்ள இரு ஊசிமுனைகளில் ஒன்றின் மூலம் விஷமற்ற அமிலத்தை உட்செலுத்தி விறைப்பூட்டும். பின்பு மற்றதால் போதியளவு ரத்தத்தை உறிஞ்சும்.

மூட்டைப் பூச்சிகளால் உணவு உட்கொள்ளாமலேயே அதாவது மனித ரத்தத்தை உறிஞ்சாமலேயே ஆறு மாதங்களுக்கும் மேலாக தெம்புடன் வாழ முடியும் என்பதும் நசுக்கமுடியாத தகவல்.

5 முட்டைகள் ஒரு முறைக்கு என்ற வீதத்தில் சுமார் 500 முட்டைகளை ஒரு பெண் மூட்டையின் ஆயுளில் இடமுடியும். 10 நாட்களில் முட்டைகள் பொரிக்கும். ஒரு வருடம் அவை சீவிக்கும்.

மூட்டைப் பூச்சிகள் நோய்காவிகளுமல்ல. நோய் காரணிகளுமல்ல. எனினும் அரிப்பு போன்ற கடும் உபாதையற்ற வருத்தங்களால் வருத்தும். ஆரோக்கியத்திற்கு அவை ஆபத்தானவையல்ல என அண்மையில் ரொறன்ரோ மாநகரசபை தீர்மானித்தது நமைச்சலை மனதில் குறைக்கின்றது.

இண்டு இடுக்குகள் இருண்ட பகுதிகள் தளபாடங்கள் திரைச்சீலைகள் சுவர் வெடிப்புக்கள் சிறு துவாரங்கள் தரைவிரிப்புக்கள் என எங்கும் உறைவிடமாக்கும் மூட்டைப் பூச்சிகளால் மாடிக்கட்டடங்களை விட்டு மாடிக்கட்டிடங்களுக்கு மின்வயர்கள் நீர்க்குழாய்கள் வேறு இதர பாதைகளுடாகவும் இலகுவில் பயணிக்க இயலும்.

Black Walnut இலைகளை அரைத்துத் தூவுவது அநாதியிலிருந்தும் அதனுடன் Boric Acid கலந்து தெளிப்பது பின்னரும் மூட்டைகளை விரட்டக் கண் கண்ட மருந்தாகக் கருதப்படுகின்றது. சாதாரணமான DDT போன்ற எங்கும் கிடைக்கும் மருந்தும் மூட்டைகள் ஒழிக்கும்! bedbugs info.com என்ற இணையம் மருந்து தெளிப்போர் விபரம் கூறி மூட்டைகளை விரட்டும். அதன் செலவுகளோ மனஇடுக்கை மிரட்டும்.

தாயகத்தில் சுவர்களுக்கு வெளியே கண்ட சுண்ணாம்பு கீறல்களும் உள்ளே தெரிந்த ரத்தக்கோடுகளும் என்றுமே மூட்டை கட்ட முடியா நினைவுகள்.

## அமைதியான தூக்கம் அவசியம்!

சிக்காகோ பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தின் ஆராய்ச்சியாளர்களின் அறிக்கையின்படி, தூக்கத்தின் போது அடிக்கடி குழப்பமடைவது, உடலின் இரத்தத்தின் குளுகோசின் அளவை ஒழுங்குபடுத்தும் தன்மையை பாதிப்பதாகத் தெரிய வந்துள்ளது. இதன் விளைவாக நீரிழிவு நோய் வகை 2 வருவதற்கான ஆபத்து நிலை அதிகரிக்கும்.

முன்னைய சில அறிக்கைகள் குறைந்தளவு தூக்கம், குளுகோசின் அளவை ஒழுங்குபடுத்தும் நிலையை குறைப்பதாக தெரிவித்திருந்தன. அதற்கு துணைபோவதாக, தூக்கத்தின் தரம் குறைவதாலும் இந்நிலை மெலும் மோசமடைகிறது.

"வாழ்க்கையின் சந்தோஷத்திற்கு தலையாய ஊக்கி தூக்கம்" என்றார் ஷேக்ஸ்பியர். அளவான, அமைதியான, குழப்பமற்ற தூக்கம் மனநிலையிலும், உடல்நிலையிலும் மிகச் சிறந்த பலன்களைக் கொடுக்கும். சிறுவர்களும் சரி, பெரியோர்களும் சரி, தமது வயதுக்கேற்ற தூக்கத்தைப் பெறுவது அவசியம்.

## உடற்பருமனை ஏற்படுத்தும் உணவுகள் தடையாகலாம்

சிறுவர்களுக்கு உடற்பருமனை ஏற்படுத்தக்கூடிய உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் விடயங்களில் சில கெடுபிடிகளை ஏற்படுத்த நகரசபை நிர்வாகம் ஆராய்ந்து வருகின்றது. நகர சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் மேற்படி உணவு வகைகள் தொடர்பான ஒரு அறிக்கையை உயர் மட்டத்துக்குச் சமர்ப்பித்துள்ளனர். பாடசாலை உணவுச்சாலைகளில் விற்பனையாகும் சிற்றுண்டிகளும் இவர்களின் கவனத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோலின் ஆரோக்கியத்திற்கு அவசியமான ஐவர்!

நம்மில் பலர், தோலின் ஆரோக்கியத்திற்கும், அழகிற்கும் பல வகையான கிறீம்களையும், எண்ணெய்களையும், பூசு களிகளையும் நம்பியிருக்கிறோம். ஆனால் இவற்றினுக்கும் மேலாக சத்துள்ள உணவின் மூலமாகவே தோலின் ஆரோக்கியத்தையும், உடலின் ஆரோக்கியத்தையும் பேண முடியும். குறிப்பாக சில சத்துகள் உறுதியான, பளபளப்பான, ஆரோக்கியமான தோலினைப் பெறுவதில் பங்கு வகிக்கின்றன. அவற்றைப் பெற சில முக்கிய உணவுகளாவன:

1. மீன்: சால்மன், திலாப்பியா, கொட் போன்ற கொழுப்புள்ள மீன்கள் அதிகளவில் Omega-3 என்னும் கொழுப்பமிலத்தைக் கொண்டுள்ளன. அது தோலிற்கு மிருதுத் தன்மையுடன், உடலுக்கு உறுத்தலை உண்டாக்கும் வெளிப் பொருட்கள் உடலினுட் புகா வண்ணம் ஒரு மேலதிக வேலி போன்று பாதுகாப்பையும் வழங்குகின்றது. இம்மீன்கள் உயிர்சத்து D யையும் அதிகளவில் கொண்டுள்ளன. இது தோலிற்கும், எலும்பு, பற்களுக்கும் மிக அவசியமானது.
2. பச்சை தேநீர்: விலை குறைந்தது, நாளாந்தம் இலகுவில் அருந்தக் கூடியது. ஆனால், சிறந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட, சக்தி வாய்ந்த அன்ரியொக்சிடன்ஸைக் கொண்டது. சரும புற்றுநோய் ஆபத்தைக் குறைக்கும் வல்லமை கொண்டது.
3. புரோக்கோலி: அதிகளவில் உயிர்சத்துகள் A, C, K இனைக் கொண்டது. உயிர்சத்து A, எண்ணெய் உருவாவதை குறைக்கிறது, C சக்திமிக்க அன்ரியொக்சிடன்ற், K கன்றிப்போன காயங்கள் உண்டாவதை தடுக்கின்றது.
4. சூரியகாந்தி எண்ணெய்: Omega-6 சரும ஆரோக்கியத்திற்கு முக்கியமானது. Omega-3 போன்று வரண்ட சருமத்திலிருந்து பாதுகாப்பதுடன், நோயழற்சியிலிருந்தும் (Inflammation) பாதுகாக்கிறது. ஹோர்மோன்களை உருவாக்குவதற்கு முக்கியமானது. இதன்மூலம் உடலின் எல்லாக் கலங்களும் சிறந்த முறையில் தொழிற்பட உதவுகின்றது.
5. அல்மன்ட்ஸ்: சருமம் முதிர்மை, தோலழற்சி, சரும புற்றுநோய் போன்றவற்றினை எதிர்க்க அன்ரியொக்சிடன்ஸ் மிக முக்கியமானவை. அதில் உயிர்சத்து E, சரும ஆரோக்கியத்திற்கு முக்கியமானது. இதனை அல்மன்ட்ஸ் அதிகளவில் தரக்கூடியது.



குயின்ரஸ் துரைசிங்கம் 21

கணினிப் பக்கம்

# காக்க காக்க கணினி காக்க...

இப்படியான மின்னஞ்சல்களைத் தயாரிக்கும்போது, பாமினி (bamini) எழுத்துருவைப் பாவிப்பது பொதுவாக விரும்பப்படுகிறது. தற்போது யூனிக்கோட் எழுத்துரு பரவலாகப் பாவனைக்கு வந்துவிட்டதுடன், அனைவராலும் பரிந்துரைக்கப்படுகின்ற ஒன்றாகவும் இருக்கிறது. எனினும், மின்னஞ்சல் அல்லது கணினி உலகின் மிக ஆரம்பகட்டப் பாவனையாளர்கள், யூனிக்கோட் என்ற தகுதர எழுத்துருவின் தன்மையையும் அதை உருவாக்கிப் பாவிக்கின்ற யுக்திகளையும் பழக்கப்படுத்திக் கொள்ளும்வரை, பாமினி எழுத்துருவைப் பாவிப்பது, பெறுநர் யாராக இருந்தாலும், அதை அப்படியே தமிழில் படிப்பதற்கு ஏதுவாக அமையும்.

பாமினி எழுத்துரு உங்களது கணினியில் இல்லை என்றால், கூகிள் தேடுதளத்தில் பாமினி எழுத்துருவைத் (bamini font) தேடி, அதைத் தரவிறக்கம் செய்துகொள்வது நல்லது. தரவிறக்கம் செய்யும்போது, எழுத்துருவை எங்கே சேமிப்பது என்பது முக்கியமானது. பொதுவாக, உங்களது கணினியின் பிரதான சேமிப்பு வங்கியாகச் செயற்படும் 'சி' (C) நினைவகத்தின் வின்டோஸ் (Windows) பகுதியில் காணப்படும் கோப்பகங்களில் (folders), எழுத்துருக்களுக்கென 'Fonts' என்ற ஒரு கோப்பகம் காணப்படும். அதைத் திறந்து, அதனுள்ளே பாமினி என்ற எழுத்துருவையும் சேமித்து விட்டால், பின்னர் தமிழில் தட்டச்சு செய்வதற்கு வழி கிடைத்துவிடும். எந்தவொரு எழுத்துருவை தரவிறக்கம் செய்யும்போதும், இந்த கோப்பகத்திற்குள் சேமிப்பதே சரியானது என்பதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

தட்டச்சுக் கருவி (keybaord) தமிழில் இல்லை என்ற ஒரு பரவலான குற்றச்சாட்டு (பொய்க் காரணம் அல்லது சாட்டுப்போக்கு) சிலரிடம் உண்டு. இதை ஏன் பொய்க்காரணம் என்று கூறவேண்டி உள்ளதென்றால், தமிழில் தட்டச்சு செய்வதற்கு தமிழ் தட்டச்சுக் கருவியே தேவையில்லை என்ற உண்மையான நிலைப்பாடு தான். கூகிள் தேடுதளத்தில் எழுத்துருவைத் தேடியதுபோன்று, தமிழில் தட்டச்சு செய்வதற்கு உரிய 'தமிழ் தட்டச்சு குறிமுறை' அமைப்பையும் தேடிக் கண்டுபிடித்து, அதை பதிப்பான் மூலம் தெளிவாக பதிப்பித்து உங்கள் முன்னே வைத்துக்கொண்டால், நேரம் கிடைக்கும்போது படிப்படியாக எழுத்துக்களைப் பழகிக்கொள்ளலாம். ஆங்கிலத்தில் தமிழ் என்று தட்டச்சு செய்துவிட்டு, அதை பாமினி எழுத்துருவாக மாற்றிப் பாருங்கள். 'தமிழ்' என்று தோற்றமளிக்கும். ஆக, எந்த ஆங்கில எழுத்தில், என்ன தமிழ் எழுத்து இருக்கிறதென்ற குறிமுறை அலகை (Tamil Font Chart) உங்கள் முன்னே வைத்து பழக்கிக்கொண்டால், நாளடைவில் தமிழில் தட்டச்சு செய்வது இலகுவான பணியாகிவிடும்.

தமிழ் மொழி பாவனையாளர்கள் பலரும் தொடர்ச்சியாகக் கேட்கும் ஒரு கேள்வியாக, தமிழ் குறிமுறை அலகை எங்கே பெறலாம் என்பது காணப்படுகிறது. அவர்களது நன்மை கருதி, அந்த அலகை விரைவில் இங்கே தரவுள்ளோம். அதைக் கத்தரித்து பாதுகாப்பதன் மூலம், படிப்படியாக தமிழ் தட்டச்சைப் பழகிக்கொள்ள அரிய வாய்ப்பு உருவாகும் என்பது திண்ணம்.

ஆங்கிலத் தட்டச்சுக் கருவிகளில் இந்த எழுத்துருக்களை அழுத்துவதன் மூலம், தமிழில் தட்டச்சு செய்ய முடியும். தட்டச்சுக் கருவியை மொழிமாற்றம் எதுவும் செய்யும் அவசியம் ஏற்படாது என்பது முக்கியமானது. வேர்ட் (Word) அல்லது வேர்ட்பேர்பெஃக்ட் (WordPerfect) அல்லது ஏதாவது தங்களுக்கு வசதியான ஒரு சொற்செயலியைத் திறந்து, அங்கே பாமினி எழுத்துருவை தேர்வு செய்த பின்னர், சாதாரணமாக ஆங்கிலத்தில் தட்டச்சு செய்வது போன்று எழுத்துக்களை அழுத்தினால், கணினித் திரையில் தமிழ் எழுத்துக்கள் தோன்றும். தரப்பட்டுள்ள எழுத்துரு குறியீட்டலகைப் பயன்படுத்தி, சரியான எழுத்துக்களை அழுத்தினால், உரிய சொற்கள் தமிழில் தோன்றும். நீங்களும் விரைவில் தமிழ் தட்டச்சுக்காரர்களாக, அநாயசமாக தமிழில் தொடர்புகளை மேற்கொள்ளலாம். குறிப்பாக, மின்னஞ்சல் மூலம் தமிழில் தகவல் அனுப்ப விரும்பினால்கூட, இப்படி முதலில் ஏதாவது ஒரு சொற்செயலியில் தமிழில் தட்டச்சு செய்த பின்னர், அதை அப்படியே பிரதி (copy) செய்து, உரிய மின்னஞ்சல் பகுதியில் பதிவு (paste) செய்வதன் மூலம், தமிழில் மின்னஞ்சல் அனுப்பும் வாய்ப்பும் உருவாகிவிடும்.

தமிழ் எழுத்துருக்களை தட்டச்சுக் கருவியில் இலகுவாக அடையாளம் காண்பதற்கு ஏதுவாக, ஆங்கில எழுத்துக்கு இணையான தமிழ் எழுத்தை, மிகச் சாதாரண பாவனையாளர்கள் கண்டறியும் வகையில் மேலும் ஒரு அட்டவணையும் உள்ளது. இந்த எழுத்துரு அட்டவணை, பாமினி அல்லது அதற்கு நிகரான எழுத்துருக் கோவைகளுக்கான அட்டவணை என்பதை பாவனையாளர்கள் நினைவிற் கொள்வது முக்கியமானது. வேறு வகை எழுத்துருக்களுக்கு இந்த அட்டவணை சிலவேளை பொருந்தாமல் போக வாய்ப்பிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்படி இருக்கு?

## தந்தைசொல் மிக்க மந்திரமில்லை!

கனடியத் தமிழ் வானொலியின் (CTR) மூத்த ஒலிபரப்பாளரான பொன்னையா விவேகானந்தன், முதியோர் அரங்க நிகழ்ச்சியொன்றில் சொன்ன கதை இது:

தமது மகளுக்குப் பாடசாலையில் தமிழ் கற்பிக்க முயற்சி எடுக்கப்பட்டபோது, பிள்ளையின் தந்தை மறுத்து விட்டார்.

"கனடாவில் தொழில் புரிவதற்குத் தமிழ் தேவையில்லை. எனவே எனது பிள்ளைக்கு தமிழ் கற்பிக்க வேண்டாம்" என்று அந்தத் தந்தை கூறிவிட்டார்.

பிள்ளைக்குத் திருமணமாகும் வயது வந்தது. பொருத்தமான ஒரு தமிழ் இளைஞனைத் தேடும் முயற்சியில் தந்தை ஈடுபடலானார். ஆனால் மகளோ தமிழ் இளைஞனைத் திருமணம் செய்ய மறுத்து விட்டாள். பலமுறை முயன்றும் பயனளிக்கவில்லை.

மனம் சலித்த தந்தை தமது நண்பர் ஒருவரிடம் விடயத்தைச் சொன்னார். அந்த நண்பர் சொன்ன பதில்: "அவள் சிறுமியாக இருக்கையில், அவளுக்குத் தமிழ் தேவையில்லை என்றாய்; அவள் வளர்ந்தபின் தமிழன் தேவையில்லை என்கிறாள்". வினைக்கு வினை!

## இலாப நட்டம் பார்க்க இது என்ன வியாபாரமா?

ரொறன்ரோ பொது நிகழ்ச்சியொன்றில் கவிநாயகர் வி. கந்தவனம் நிகழ்த்திய உரையில் குறிப்பிட்டது இது:

கனடாவில் எமது பிள்ளைகள் தமிழ் படிப்பதால் என்ன இலாபம் (profit) கிடைக்குமென்று சிலர் கேட்கின்றனர்.

இது என்ன வியாபாரமா இலாப நட்டக் கணக்குப் பார்ப்பதற்கு! தமிழ் எங்கள் தாய்மொழி என்பதை மறந்தவர்கள் கேட்கும் கேள்வியா அல்லது விதண்டாவாதமா?

சீனர், யப்பானியர், இத்தாலியர், போர்த்துக்கேயர், பிரெஞ்சுக்காரர், ஜேர்மனியர் தங்கள் பிள்ளைகளுக்கு. பேரப்பிள்ளைகளுக்கு தமது தாய்மொழியைக் கற்பிக்க இவ்வாறு கேட்கவில்லையே!

தமிழர் மட்டும் எதற்காக தாய்மொழியைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க இலாபமுண்டா என்று கேட்கின்றனர்? இதனை அறிவு விருத்தி என்பதா, முட்டாள்தனம் என்பதா?"

## தமிழைப் பிளந்து நசித்து மசிக்கும்.....

ரொறன்ரோ இளையோர் கருத்தரங்கொன்றில் இலங்கையில் கல்வி அதிகாரியாகவிருந்த ஒருவர் சொன்னது இது:

"புகலிட மண்ணில் தமிழைக் காக்கவும் வளர்க்கவுமென உருவான தமிழ் ஊடகங்களில் பணியாற்றும் சிலர் அதனை அழிப்பதில் போட்டியாகச் செயற்படுகின்றனரோ என எண்ணத் தோன்றுகிறது.

செய்திகளிலும், உரையாடல்களிலும் வலிந்து ஆங்கிலத்தை (அழித்து) நுழைக்கின்றனர். ஐ. நா. சபையை யு. என் என்கிறார்கள். இந்தியா என்பதை 'இன்டியா' என்கிறார்கள்.

நல்ல தமிழில் யாராவது வந்து உரையாடினால், 'விளக்கமான தமிழில் சொல்லுங்களேன்" எனக்கூறி நக்கல் அடித்து அனுப்புகின்றனர். எதற்காக இப்படி நடந்து கொள்கின்றனர் என்பது தெரியவில்லை.

இவ்விடத்தில், கனடிய இளையோருக்கு நான் தலை வணங்குகிறேன். மேடை நிகழ்ச்சிகளில் துணிச்சலுடன் பங்கேற்று நல்ல தமிழில் உரையாற்றுகின்றனர். தமிழ் ஊடகக்காரர்கள், எமது இளையோரைப் பார்த்தாவது திருந்த வேண்டும்" என்றார் அந்தப் பேச்சாளர்.

**உதாசனன் உலா விருந்து**

## கையளிக்கத் தவறின் வரலாற்றுத் துரோகம்

பெற்றோர் நிகழ்ச்சியொன்றில், தமிழர் தகவல் ஆசிரியர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது:

"நான் சிறுவனாக இருக்கையில், நான் கேட்டா எனது பெற்றோர் எனக்குத் தமிழைப் போதித்தனர். இல்லை. விளையாடுகையில், உணவூட்டுகையில், ஊஞ்சலாட்டுகையில் கொஞ்சம் கொஞ்சமாக தாய்மொழியை ஊட்டினார்கள்.

இதனை எனது பிள்ளையிடம் கையளிக்க வேண்டியது எனது கடமை. 'பிள்ளைக்கு விருப்பமில்லை' என்று சாக்குச் சொல்லி, தமிழைக் கற்றுக் கொடுக்க மறுப்பது பெரும் துரோகம். பெற்றோர்களே! இந்த வரலாற்றுத் துரோகத்தைச் செய்யாதீர்கள்!"

## திருமணமா, அல்லது ஈ. எஸ். எல். வகுப்பா?

கடந்த மாதம் ஸ்காபரோ நகரில் இடம்பெற்ற நூல் வெளியீடொன்றில் உக்கிரனுடன் உரையாடிய தமிழ் வழக்கறிஞர் ஒருவர் சொன்னது இது:

"எனது மகளுக்குப் பல இடங்களிலிருந்தும் திருமணப் பேச்சுகள் வந்தன. ஆனால் எதுவும் அவளது கல்வி, தொழில் ஆகியவற்றுக்குப் பொருந்துவதாக இல்லை.

வேறு சில, சாதகப் பொருத்தமாக இல்லை. நல்லதொரு சம்பந்தம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது. சந்தோஷமாக இருந்தது.

"அக்கா ஈ. எஸ். எல் வகுப்பு நடத்தவா திருமணம் செய்யப் போகின்றார்" என்று பன்னிரண்டு வயதான இளைய மகள் என்னைப் பார்த்து நெற்றியிலடித்தது போலக் கேட்டாளே! நான் விறைத்துப் போனேன் என்று சொன்னார் அந்த வழக்கறிஞர்.

*குறிப்பு: English as a Second Language வகுப்பு (ஈ. எஸ் எல்) என்பது, கனடா வரும் புதியவர்களுக்கு நடத்தப்படும் ஆங்கிலக் கல்வி வகுப்பு.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரிக்கும் கல்விச் செலவுகள் RESP திட்டத்தில் மாற்றம் வரலாம்!

கட்டற்று அதிகரித்துச் செல்லும் கல்விச் செலவுகளை சமாளிப்பதற்கும், அதனால் பெரும் கடன் சுமையுடன் வாழ்க்கையைத் தொடங்கும் மாணவர்களுக்கு உதவும் முகமாக, பெற்றோர் கல்விச் சேமிப்புத் திட்டத்தின் மூலம் தமது பிள்ளைகளின் கல்விக்காக முடிந்தளவு பணத்தினை சேமிக்கின்றனர். ஏற்கனவே இருக்கும் RESP எனப்படும் பதிவு செய்யப்பட்ட கல்வி சேமிப்புத் திட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டுமென்று அரசியல் கட்சியொன்று முனைகின்றது. எதிர்க்கட்சியான லிபரல், RESP சேமிப்பினை கிட்டத்தட்ட RRSP போன்ற திட்டமாக மாற்ற சட்டமியற்ற முயற்சிக்கின்றது. இத்திட்டத்தினை கொன்சர்வேற்றிவ் அரசாங்கம் எதிர்க்கின்றது.

உயர்கல்விச் செலவுகளை சமாளிக்க உதவுவதற்காக, ஒன்ராறியோ லிபரல் கட்சி, புதிய வரைபொன்றினை அறிமுகப்படுத்தியது. கொமன்ஸ் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இவ்வரைபு, செனட் சபையின் அங்கீகாரத்திற்காக காத்திருக்கின்றது.

இவ்வரைபு சட்டமாக்கப்பட்டால், பெற்றோர்கள் ஒவ்வொரு பிள்ளைக்கும் தலா $5,000 டாலர்களை RESP இல் வருடமொன்றுக்கு சேமிக்க முடியும். அத்துடன் அத்தொகையினை தமது வருமான வரியில் கழிக்கவும் முடியும். தற்போது, RESP க்கு வருமான வரி மீளளிப்பு இல்லை.

வரி வீதம் 35% எனக் கணக்கிட்டால், ஒரு மத்திய வருமானமுள்ள குடும்பத்திற்கு, $5,000 டாலர் RESP பங்களிப்பானது, ஏறத்தாழ $1,750 டாலர்களை சேமிக்கும்.

கனடியர்கள் கிட்டத்தட்ட $23 பில்லியன் டாலர்களை RESP இல் முதலிட்டுள்ளார்கள்.

புதிய வரைபின்படி, மாணவர்கள் RESP இலிருந்து பெறும் முழுப் பணத்திற்கும் வரி செலுத்த வேண்டும். தற்போது, முதலீட்டிலிருந்து பெற்ற வருமானத்திற்கும், அரசாங்க கொடுப்பனவுக்கும் மட்டுமே வரி செலுத்த வேண்டும்.



றஞ்சி திரு

## சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் அதன் வரவு செலவுத் திட்டத்தின்போது மிச்சமாகக் காணப்படும் நிதியில் ஒரு தொகையை இங்குள்ள மாநகர சபைகளுக்கு வழங்க உத்தேசித்துள்ளது. மிகுதிப் பணம் அரசாங்கத்தின் கடன் தொகையை அடைக்கப் பயன்படும். மொத்தமான மிகுதிப் பணத்தில் 25 சதவீதம் மாநகரசபைகளுக்குக் கிடைக்குமென்று டால்ரன் மக்கன்ரி அரசு அறிவித்துள்ளது.

ரொறன்ரோ போக்குவரத்துச் சேவைக்கு (TTC) கனடிய மத்திய அரசு 300 மில்லியன் டாலர்களை வழங்க முன்வந்துள்ளது. நீண்ட காலத்துக்குப் பின்னர் ரொறன்ரோ போக்குவரத்துச் சேவையைப் புனரமைக்கவும், விஸ்தரிக்கவும் இந்தப் பணம் பயன்படுத்தப்படும். மத்திய அரசின் இந்த முடிவினை ரொறன்ரோ மேயர் டேவிட் மில்லர் வரவேற்றுள்ளார்.

இயக்க சக்தி குறைந்தவர்களுக்கான (Disabled Parking) வாகன தரிப்பிடம், மற்றும் அவசர சேவைகள் தீயணைப்புக் குழாய் அமைந்த இடங்களில் வாகனங்களை எவராவது நிறுத்திச் சென்றால், தண்டப் பணமாக மூன்று மடங்கு அதிகரித்த தொகையை இனிமேல் செலுத்த வேண்டும். புதிய தண்டப் பணம் ஒவ்வொன்றுக்கும் வித்தியாசமானதாக, 100 டாலர்களிலிருந்து 450 டாலர்கள் வரை கூடியதாய் இருக்கும்.

ரொறன்ரோ நகரசபை அண்மையில் அதன் சொத்து வரியை 3.75 வீதத்தினால் அதிகரித்தது தெரிந்ததே. ஆனால் பலர் சுமார் 4 வீத அதிகரிப்புள்ள வரி செலுத்த வேண்டிய அறிவுறுத்தல்களை நகர சபையிடமிருந்து பெற்றுள்ளனர். இது தற்செயலான தவறா அல்லது. உண்மையான தொகைதானா என்பதை அறிவதில் வரியிறுப்பாளர்கள் அக்கறை கொண்டுள்ளனர்.

பிரதான நெடுஞ்சாலைகளில் ஓடித்திரியும் பாரிய வர்த்தக பாரவூர்திகளின் (large commercial trucks) வேகத்தினைக் குறைக்கும் அல்லது கட்டுப்படுத்தும் புதிய சட்ட மூலமொன்றினை ஒன்ராறியோ மாகாண அரசு கொண்டுவர உள்ளது. மின்னியல் உபகரணங்களை வீதிகளில் பொருத்துவதன் மூலம், வேக எல்லையை மீறும் பாரவூர்திகள் கண்டு பிடிக்கப்படும். எரிபொருள் ஏற்படுத்தும் சூழல் அசுத்தமடைதலையும் இது குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

லொத்தர் சீட்டுகளின் இலக்கங்களை மாற்றி, வெற்றிப் பணத்தைப் பெற்ற சிலரை ஒன்ராறியோ பொலிசார் கைது செய்துள்ளனர். கடந்த மாதத்தில் இரு சகோதரர்கள் இணைந்து இவ்வாறான மோசடியொன்றினைச் செய்ய முனைந்த வேளையில் இவர்கள் அகப்பட்டனர். இதனையடுத்து நடத்தப்பட்ட புலன் விசாரணையில், முன்னைய மோசடியாளர்கள் சிலர் அகப்பட்டுள்ளனர்.

உறவினர்களை ஸ்பொன்சர் செய்து கனடாவுக்கு வரவழைத்த பின்னர், அவர்களைப் பராமரிக்கத் தவறிய சிலர் புதிய பிரச்சனைகளுக்குத் தலை கொடுக்க ஆரம்பித்துள்ளனர். ஸ்பொன்சரில் வந்த உறவினர்கள் பெற்ற பொதுநலப் பணத்தை மீளச் செலுத்துமாறு இவர்கள் கேட்கப்பட்டிருந்தனர். இதனைக் கவனியாது இருந்தவர்கள் மீதே சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இவர்கள் வாழ்நாள் முழுவதும் புதிய எவரையும் ஸ்பொன்சர் செய்வது சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது.

காலை உணவைத் தவறாமல் சாப்பிட்டு வந்தால், உடல் பருமனாகாது என்றும், சுறுசுறுப்பாக இயங்கலாம் என்றும் பிந்திய ஆய்வொன்று தெரிவிக்கின்றது. உடலை மெல்லியதாக வைத்திருப்பதற்காகச் சிறியோர் முதல் பெரியோர் வரை காலைச் சாப்பாட்டை ஒதுக்கி வருகின்ற இக்காலத்தில், புதிய ஆய்வொன்று அதற்கு எதிர்மாறான தகவலை வெளியிட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜன அதிபர்
பொ. கனகசபாபதி

# இலங்கா தரிசனம் - நவரசம் -3

அவருக்கோ உள்ளே போகும் அவசரம். காசு விதைக்கப்பட்டதை அவர் அறியார். நான் 'ஹலோ, ஹலோ உமது காசு' என்று அழைத்தேன். அவர் அவசரம், காதலி அழைத்திருந்தாலும் அவர் காதில் ஏறியிருக்க மாட்டாது பின் என் குரலா அதனுள் புகும்? நான் பணத்தைப் பொறுக்கினேன். பணிப் பெண்ணிடம் கொடுத்து அவர் வரைவிலக்கணைத்தையும் கூறிச் சேர்ப்பிக்குமாறு கேட்டேன். உள்ளே கொண்டு சென்றவர் சிறிது நேரத்தின் பின்னர் திரும்பி வந்தார். நீ சொன்ன மாதிரி ஒருவரை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. அவரும் உனது விமானத்தில் போவதால் நீயே காணலாம். ஆகவே, அவரிடம் சேர்ப்பி என்று பணத்தை என்னிடமே தந்து விட்டார்.

கடைசியில் எல்லோரையும் விமானத்தில் ஏற்றிய பின்னர் என்னைச் சில்லுக்கதிரையில் வைத்துக் கொண்டு சென்று விமானப் பணிப் பெண்ணிடம் கையளித்தார்கள். முகமெல்லாம் புன்னகை பொழிய அணைக்காத குறையாய் அழைத்து இங்கிதத்துடன் என்னை இட்டுச் சென்றார் அவர். எனது கைப்பையினையும் கைத்தடியினையும் மேல் உள்ள கூட்டில் வைத்துவிட்டு எனக்கு ஒரு மூலை இடத்தினைத் தந்தார். நான் அந்த நண்பருக்காக அங்கும் இங்கும் பார்த்தேன். எனது ஆசனத்தைக் கூடப் பார்க்கவில்லை. அவரைக் காணவில்லை. ஏன் நிற்கிறாய் உட்காரேன் என்றார் பணிப்பெண். இல்லை ஒரு நண்பரைப் பார்க்க வேண்டும் என நான் கூறுவதற்கு முன்னரே, முன்னே இருபுறமும் நின்று பணிப் பெண்கள் பாதுகாப்பு அபிநயம் பிடிக்கத் தொடங்கிவிட்டனர். இவை பரத முனிவர் சொல்லாத பாவம். 'உட்கார் பாதுகாப்புப் பட்டியைப் போடு. பின்னர் நண்பரைத் தேடு' என்றார், என்னை இட்டுச் சென்ற பணிப்பெண். ஆசனத்தைப் பார்த்தேன் அசந்து விட்டேன். நான் சாதாரணமாக அமரும் ஆசனம் போல இல்லை. நான் எப்போதும் போவது பொருளாதார வகுப்பு. அதற்கு இப்படிப்பட்ட ஆசனமா? இது புதிய ரக விமானமா? சிறிது நேரம் எடுத்த பின்னர் தான் தெரிந்தது இது வியாபாரிகள் வகுப்பு என்ற உண்மை. இது என்ன அற்புதம். என்னை இங்கு ஏன் கொண்டு வந்து உட்கார்த்தியுள்ளனர். அவர்களிடம் சொல்வதா? அல்லது கிடைத்த அதிருஷ்டத்தை அனுபவிப்பதா? மனதில் நீண்ட போராட்டம். இறுதியில் அற்ப ஆசை வென்றது. நானா கேட்டேன். அவர்கள் தந்தார்கள். கிடைத்ததை அனுபவிப்போமே! ஆகவே அவர்கள் பிழையை உணர்ந்து எனக்கு உரித்தாய ஆசனத்தைத் தந்தால் போவோம் அது வரை இருப்போம். மனதுக்குள் மாத்திரம் ஒரு பயம். பாவிகள் கண்டு பிடித்து விடுவார்களோ?

எல்லா ஆரம்ப வேலைகளும் முடிந்து விமானம் மெல்ல மெல்ல ஊர்ந்து வானத்தைக் கிழித்துக் கொண்டு பறந்தது. எனது பயமும் மறைந்தது! நண்பரின் காசும் கடைசியில் என்னிடமே நின்றது. மீண்டும் ரொறன்ரோ வந்தபோது கைச் செலவிற்கு உதவி வந்தது. அற்புதம் நிகழ்ந்தது. அடே லொற்றோ எடுத்துவிட்டு வந்திருக்கலாமோ?

**5.சிருங்காரம்:** சிருங்கார ரசம் இளமையுடன் சம்பந்தப்பட்டது என பரதமுனிவரின் கணிப்பு. அப்படி என்றால் இந்த முதியவன் இதில் ஏன் கூழைக் கூத்தாடுகிறான் என நீங்கள் மனதில் புழுங்குவது எனக்குத் தெரியாமல் இல்லை. எப்படி நான் உங்களைச் சமாளிக்கப் போகிறேன் என்று தான் பாருங்களேன்.

இந்த சிருங்காரம் உள்ளதே அதனைப் பரத முனிவர் எனக்காகத் தானோ இரு வகையாக வகுத்தள்ளார். ஒன்று சம்போக சிருங்காரம் மற்றது விப்ரலம்ப சிருங்காரம். இதில் முன்னையது இரண்டு அன்பு உள்ளங்களின் சேர்க்கையினால் ஏற்படுகின்ற உணர்ச்சிக் கனிவு. பின்னையது அவ்விதமான இரண்டு அன்பு உள்ளங்கள் ஒன்றினை விட்டு ஒன்று நீங்குகையில் ஏற்படுகின்ற உணர்ச்சிக் கனிவு. அது அந்தக் காலம் அந்த இரண்டு அன்பு உள்ளங்களில் ஒன்று காதலனாகவும் மற்றையது காதலியாகவும் இருந்தது. இது கலிகாலம் ஐயா கலிகாலம். நமது மாகாண சுகாதார மந்திரி, அவர்தான் துணை முதல்வரும் கூட, கேட்கிறதா? முதல்வரின் துணை அல்ல! அவர் பெயர் ஸ்மிதர்மன். அவர் ஒரு காதலி(னி)யை வைத்துள்ளார். இப்போ முறைப்படி கையும் பிடித்துவிட்டார். அப்போ அவர்களின் உறவில் உணர்ச்சிக் கனிவு இல்லை என்றா சொல்கிறீர்கள்.

ஏன் கலைஞர் கருணாநிதி தமிழக சட்டப் பேரவையிலே தை மாதம் முதல் திகதியையே தமிழரின் ஆண்டு முதல் திகத-'யாகப் பிரகடனம் செய்த பின்னர் பட்டி தொட்டி மேடை எல்லாம் ஒருகதை பற்றி முழங்கினாரே கேட்டதில்லையா. அதாவது நாரதருக்கு பிரம்மாமேல் காதல் ஏற்பட்டதாம். அவர் மூலம் பிள்ளை பெறவேண்டும் என ஆசை ஏற்பட்டதாம். அதன் விளைவு ஒன்றல்ல இரண்டல்ல அறுபதாம். காதல் என்றால் அத்தனை காதல். அறுபது பெறுமட்டும் உணர்ச்சிக் கனிவு இறங்கியபா-டில்லை! அத்தனையினது பெயர்களையும் தான் எமது வருடங்கள் தாங்கி வந்தனவாம். ஆக இவை எல்லாம் சிருங்காரமில்லையா. அப்படியானால் எனது சிருங்காரக் கதையினை இப்போ கேளுங்கள்.

ஒருநாள் காலை இருவர் என்னைச் சந்திப்பதற்காக வந்திருந்தார்கள். ஒருவர் தானையா மற்றவர் மழவராயர் என்னும் இளைஞர். திருவாளர் தானையா கல்வித் திணைக்களத்திலே உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றவர். மழவராயர் புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியை நிறுவிய சீமான் மழவராயர் கந்தையாவின் கொள்ளுப் பேரன். இருவருமே புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. சேம லாபங்களை விசாரித்தோம். நான் கொழும்பு வந்திருப்பதாக அறிந்ததாகவும் ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினர் என்னைச் சந்திக்க விரும்புவதாகவும் இராப்போசனத்துக்கு என்னை அழைக்க வந்திருப்பதாகவும் கூறினார்கள். நான் சோமாஸ்கந்த கல்லூரி யினை விட்டு மகாஜனாவுக்கு அதிபராகப் போனது 31 வருடங்களுக்கு முன்னர். பெற்றோர் பழைய மாணவர்களுக்கு நான் அப்பாடசாலையை விட்டு நீங்கியது அவ்வளவு திருப்தியில்லை என்ற போதிலும் மிகப் பெரிய அளவில் ஒரு பிரியாவிடை நடத்தினார்கள்.

ஆனால் 31 வருடங்களின் பின்னர் நான் ஊர் வந்துள்ளதை அறிந்து என்னைச் சந்திக்க விரும்பிய பழைய மாணவர்களை எண்ணும் போது எனது உள்ளம் நெக்குருகியது. வெறும் ஐந்து வருடங்கள் தான் நான் அப்பாடசாலையில் கடமையாற்றினேன். ஆனால் அந்த ஐந்து வருடங்கள் என் வாழ்விலே மறக்க முடியாத வருடங்கள்.

தினைத்துணை நன்றி செயினும்
பனைத்துணையாகக்
கொள்வர் பயன் தெரிவார் (11 - 4)

என்றார் வள்ளுவர். ஆனால் இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னருமா?
அதற்கும் வள்ளுவரே அடுத்த குறளில் பதில் தருகிறார்

உதவி வரைத்தன் றுதவி உதவி
செய்யப்பட்டார் சால்பின் வரைத்து (11- 5)

இராப் போசன விருந்திற்குப் போனேன். அது விருந்தா? இல்லை அத்தனை பேரும் இத்தனை பாசத்தை என் மேல் கொண்டிருந்ததற்கு என்ன காரணம். அத்தனை உள்ளங்களிலும் உணர்ச்சிக் கனிவினை என்னால் காணமுடிந்தது அவர்கள் கண்களில், அவர்கள் வார்த்தைகளில் அவர்கள் உள்ளத்தில் எங்குமே சிருங்கார ரசம் திவ்வியமாகப் பிரதிபலித்தது எனக்குப் புரியாத புதிராகவே உள்ளது.

**6. வெறுப்பு (பீபஸ்தம்):** பூக்கன்றுகளின் மேல் அபாரமோகம் எனக்கு உள்ளது என்பதை எனது நண்பர்கள் அறிவார்கள். நான் அதிபராகப் பொறுப்பேற்ற பாடசாலைகளில் முதல் வேலையாகப் பூக்கன்றுகள் நடுவதுண்டு.

(20ம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களப் பேரினவாதி அர்ஜுன றணதுங்க

# தமிழரின் எதிர்ப்புக்கு அஞ்சி கனடா வருகை ரத்து



## திட்மிட்டபடி கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் வெற்றி



கனடாவிலுள்ள சிறீலங்கா தூதரகத்தின் ஆதரவுடன் கனடாவாழ் தமிழ் மக்களை பிளவுபடுத்தும் நோக்குடன் சில புல்லுருவிகளால் கடந்த மாதம் 28ஆம் திகதி ரொறன்ரோவில் ஏற்பாடு செய்யப்பட்ட விருது-விருந்து விழாவுக்கு வருகை தரவிருந்த மகிந்த அரசின் எம்பியான சிங்களப் பேரினவாதி அர்ஜுன றணதுங்க தமிழர்களின் எதிர்ப்பலைக்கு முகம்கொடுக்க முடியாமல் தனது விஜயத்தை ரத்து செய்தார். கனடிய தமிழ்ப் படைப்பாளிகள் கழகம் ஏற்கனவே ஏற்பாடு செய்தபடி வைபவம் நடக்கவிருந்த ஹோட்டிலின் முன்னால் கறுப்புக்கொடி ஆரப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்தியது. பல நூற்றுக்கணக்கான தமிழுணர்வாளர்கள் இதில் பங்குபற்றினர். ஒளிப்படங்கள்: பொன் பாலராஜன்.








விருது - விருந்து - கறுப்புக்கொடி - ஆர்ப்பாட்டம் தொடர்பான விபரக் கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் மாமனிதர் கி. சிவனேசன் நினைவு வணக்கம்



கடந்த மாத முதல வாரத்தில், சிறீலங்கா இராணுவ ஆழ ஊடுருவித் தாக்கும் அணியினரால் நடத்தப்பட்ட தாககுதலில் பலியான தமிழர் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் கி. சிவனேசனின் நினைவு வணக்கம் ஸ்காபரோவில் நடைபெற்றது. கனடாவிலுள்ள தமிழர்களின் ஊர்ச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள் மற்றும் பொது அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்த முதலாவது பொது நிகழ்வு இதுவாகும். மேற்படி அமைப்புகளின் பிரதிநிதிகள், மூத்தோர்கள், ஊடகவியலாளர்கள் உரையாற்றிய இந்நிகழ்வில், தமிழ் இளையோர் பெருமளவில் பங்கேற்று உரையாற்றியது குறிப்பிடத்தக்கது.


(ஒளிப்படங்கள்: கோகுலன்)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Memorial for 'Maamanithar' K. Sivanesan

**Jaffna district Tamil National Alliance (TNA) parliamentarian K. Sivanesan was killed in a claymore attack carried out by the Sri Lanka security forces on March 9. The claymore attack took place between Puliyankulam and Mankulam on A-9 road. A memorial meeting was held in Scarborough organized by local Tamil groups.**
(Photos: Gokulan)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதாண்டு கால ஆசிரியப் பணி நிறைவு
# ஒரே சூலில் மூன்று பிரசவங்கள்; காலத்தால் அ

















யா
மு
உ
அ
ஆ
அ
கி
க
வி
ரெ
அ
வி
ம
வி

நா
நூ
தி
வ
செ
நூ
தெ



ஒளிப்படங்கள்
டாக்டர் சிவனேசன் & மகாஜன கருணா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வுடன் இணைந்த நூல்களின் அரங்கேற்றம்
# ... அழியாத கனடியத் தமிழரின் வரலாற்று விழா







யாழ். புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி, மகாஜன கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்களின் கற்பனையும் உண்மையும் சேர்ந்த கலவைகளாக உருவாகிய மூன்று நூல்களின் அறிமுக அரங்கேற்ற வைபவம், கடந்த மாதம் 16ஆம் திகதி பிற்பகல் கனடா கந்தசாமி ஆலய அலங்கார மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. மூன்று அரங்கமாக மூன்று நூல்களும் வெளியிடப்பட்ட முறைமை, உரைகளைச் சீராகக் கிரகிக்கவும், ஒழுங்காக விழாவை நடத்திடவும் உதவியது. யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறையின் முன்னாள் பேராசிரியரான கலாநிதி நா. சுப்பிரமணியன் விழாவுக்குத் தலைமை தாங்கினார். கலைஞர் கதிர் துரைசிங்கம் விழாவை நெறிப்படுத்தி தொகுத்து வழங்கினார். நூலாசிரியரின் உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் என்ற வகையில் தெரிந்தெடுக்கப்பட்ட அறுவர் மங்கல விளக்கேற்றியதையடுத்து, நூலாசிரியரின் ஏகபேர்த்தியான இலட்சியா மணிவண்ணனின் கனடா தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றுடன் விழா ஆரம்பமானது. சிவஸ்ரீ ப. விஜயகுமார குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

நாம் எங்கே போகிறோம், மாறன் மணிக்கதைகள் - 2, திறவுகோல் ஆகிய நூல்கள் இங்கு அரங்கேற்றம் கண்டன. தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம், கவிநாயகர் வி. கந்தவனம் ஆகியோர் நட்புரைகள் வழங்கினர். முதலாவது நூலுக்கு முன்னாள் கல்வி அதிகாரி க. கந்தசாமி வெளியீட்டுரை வழங்க, எழுத்தாளர் க. நவம் ஆய்வு செய்தார். இரண்டாவது நூலுக்கு ஆசிரியர் கோதை அமுதன் வெளியீட்டுரை வழங்க, எழுத்தாளர் எஸ். ஜெகதீசன் ஆய்வு செய்தார். மூன்றவது நூலுக்கு திரு. எஸ். விஜேந்திரா

(31ஆம் பக்கம் வருக)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் நகராட்சி சபைத் தேர்தல்
# ஏழு ஈழத் தமிழர் உட்பட பன்னிரண்டு தமிழர் வெற்றி

பிரான்சில் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 7 ஈழத்தமிழர்கள் உட்பட 12 தமிழர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

பிரான்ஸ் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஈழத்தமிழர்கள் பங்கேற்றிருப்பது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் பிரான்சின் அரசியலில் ஈழத்தமிழர்களும் பங்காற்றத் தொடங்கி உள்ளனர்.

எனினும் இதற்கு முன்னர் ஈழத்தைச் சாராத தமிழர்கள் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்ததுடன் பிரான்ஸ் அரசியலிலும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிரான்சின் தலைநகரான பாரிசிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் 14 ஈழத்தமிழர்கள் போட்டியிட்டனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இளந் தலைமுறையினர் என்பது சிறப்பம்சமாகும்.
இரண்டு சுற்றுக்களாக இடம்பெறும் தேர்தலின் முதல் சுற்றுத்தேர்தல் 09.03.08 அன்று நடைபெற்றது. இதில் ஐந்து ஈழத்தமிழர்கள் வெற்றிபெற்றனர்.









பிரான்சில் குடியேறி முப்பது ஆண்டுகள் ஆகாத நிலையில் தேர்தலில் நின்று முதல் சுற்றிலேயே ஐந்து ஈழத்தமிழர்கள் வெற்றி பெற்றது பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

இவர்களைத் தவிர மொறிசீயசைச் சேர்ந்த லீலாவதி இராஜேந்திரம் (இவர் ஈழத் தமிழரையே திருமணம் செய்தவர் அத்துடன் பிரான்சில் தயாரிக்கப்பட்ட "பேரன் பெயர்த்தி" குறும்படத்தில் இவரும் இவரது குடும்பத்தினரும் பங்கேற்றிருந்தனர்), பாண்டிச்சேரியைச் சேர்ந்த அலன் ஆனந்தன் (இவர் மூன்றாவது தடவையாகவும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கின்றார்), சந்திரசேகரம் பரசுராமன், திருமதி. சாமா நீலவண்ணன், திருமதி மரி வீரபத்திரன் ஆகியோரும் முதல் சுற்றுத்தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர்.

இரண்டாவது சுற்றுத் தேர்தல் கடந்த ஞாயிற்றுக்கிழமை (16.03.08) நடைபெற்றது. இதில் ஈழத் தமிழர்களான அருள்சாந்தம் புவனேஸ்வரராஜா, திருமதி கலையரசி ரவீந்திரநாதன் ஆகிய இருவர் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த தேர்தலில் வெற்றிபெற்ற 12 தமிழர்களின் விபரமும் வருமாறு:

Naguleswary ARIYARATNAN (eelam)
Sarmela SABARATNAM (eelam)
Sophia SOOSAIPILLAI (eelam)
Preetty NAVANEETHARAJU, (eelam
Asamtathayalini WILLIAN-REGINALD (eelam)
M. Arulasantham PUVANESPARARAJAH (eelam)

Kalaiyarasi RAVIENDRANATHAN (eelam)
Lilawtee RAJENDRAM (mauritius)
M. Alain ANANDANE (pondicheri)
M. Chandrasegaran PARASSOURAMANE,(pondicheri)
Shama NILAVANNANE (pondicheri)
Marie DARVES-BORNOZ (guaduloupe)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவாஜினி பாலராஜன் -1

# பெண்ணின் பொழுது

வாழ்த்துகள், வாழ்த்து மடல்கள் அனுப்புவது என்பது தமிழினத்திற்கு மட்டுமல்ல எந்த இனத்திற்கும் உள்ள ஒரு பழக்கம். பிறந்த நாள் வைபவங்கள், திருமண வைபவங்கள், திருமண நினைவு நாட்கள் இவை மட்டுமல்ல உடல் நலக் குறைவானவர்களுக்கு இப்படிப் பலவிதமான வைபவங்களுக்கு நாம் மடல்கள் அனுப்புகின்றோம். இவ்வாறு அனுப்பும் மடல்களை தெரிந்தெடுப்பது பல விதம். சிலர் கடையில் போய் ஏதோ கையில் கிடைக்கும் ஒரு மடலை வாங்கி வந்து விடுவார்கள். சிலர் மடல்களை எடுத்து விரித்து வாசித்துப் பார்த்து தான் வாங்குவார்கள். எப்போதும் படம் அழகாக இருக்க வேண்டும் என்று பார்ப்பதை விட அதில் இருக்கும் வாசகங்கள் நல்லதாக இருப்பது மிகவும் சிறப்பாக இருக்கும். நீங்கள் கையால் தயாரிக்கும் மடல்களுக்கு நீங்கள் கற்பனை வளம் உள்ளவராக இருந்தால் சொந்தமாக வாழ்த்துக்களை எழுதலாம் அல்லது இணையத்தில் தேடிப் பார்த்து எடுத்து எழுதலாம்.

இந்த முதலாவது பெண்ணின் பொழுதில் வாழ்த்து மடல்கள் செய்வது எப்படி என்று பார்ப்போம். இந்த வாழ்த்து மடல்கள் செய்வது கடினமானதல்ல. யாரும் செய்யலாம். எனவே நீங்களும் முயற்சி செய்து பாருங்கள். உங்கள் பிள்ளைகளையும் ஈடுபடுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் பிள்ளைகளுக்கும் இதில் ஆர்வம் ஏற்படும்.

Walmart, Business Depot ஆகிய இடங்களில் Card stock என்று சொல்லப்படும் மட்டைகள் வாங்கலாம். இது Business Depot வில் வாங்குவதை விட Walmartல் மலிவாக இருக்கும். இதில் 100 மட்டைகள் இருக்கும். அதன் விலை $7.80 தான். அதே போல் சில கடைகளில் வித்தியாசமான வடிவங்களில் வெட்டியபடியே உருவ முத்திரைகள் அல்லது வடிவங்கள் வாங்கலாம். உதாரணமாக கேக் வடிவம், பூ வடிவம் போன்றவை. இவற்றை வாங்கி உங்கள் ரசனைக் கேற்றபடி ஒட்டி வாழ்த்துமடல்கள் தயாரித்துக் கொள்ளலாம். எழுதும் வாழ்த்துகளை நிறப்பட்டி உள்ள பிறின்ரர் (colour printer) பாவித்து அச்சடித்துக் கொள்ளலாம். இவ் வகைப் பிறின்ரர்கள் கூட இப்போ முப்பது நாற்பது டொலர்களுக்கு விலைப்படுகின்றது. ஆகவே நிறத்தில் எழுத்துக்களை அச்சுப்பதிப்பதிலும் உங்களுக்கு பிரச்சனை இருக்காது. சிலர் நினைப்பார்கள் டொலர் கடையில் நல்ல வாழ்த்து மடல்கள் மலிவாக வாங்கி விடலாம். ஏன் நேரத்தை வீணாக்கி செய்யவேண்டும் என்று. செய்து பாருங்கள் அதன் பின் உங்களுக்கு அடிக்கடி வாழ்த்து மடல்கள் தயாரிக்க வேண்டும் என்று ஆசை வரும். அதுமட்டுமல்ல நாங்கள் தயாரிப்பதால் அதில் எங்களுக்கு ஒரு மகிழ்வு, ஒரு விதமான திருப்தியும் ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட விடயங்கள் எங்களுக்கு மன மகிழ்வு தருவது மாத்திரமல்ல தன்னம்பிக்கையையும் கற்பனாசக்தியை வளப்படுத்தவும் உதவும்.



இதில் சில படங்கள் இணைத்திருக்கிறேன். பார்த்தீர்களானால் உங்களுக்கும் புதுப் புது எண்ணங்கள் வரலாம். இவை மிகவும் சுலபமான வழியில் தயாரிக்கப்படக் கூடிய மடல்கள்.

மீண்டும் இன்னொரு வகையான பொழுது போக்குடன் உங்களை சந்திக்கின்றேன்.

HERITAGE
Education Funds
**RESP SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**


உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கா தரிசனம்..

கனடாவிலே வருடம் முழுவதும் இக்கலையில் ஈடுபட முடியாவிட்டாலும் ஐந்து மாதங்கள் அற்புதமாக பூக்கன்றுகள் வளர்க்கலாம். ஒன்ராறியோவில் உள்ள பிரபலமான நாற்று மேடைக்காரர்கள் (Nursery) ஒவ்வொரு பருவகாலத்திற்குரிய தமது விளம்பர சிற்றேடுகளை எனக்கு அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். படங்கள் அத்தனையுமே அழகாயிருக்கும். எதனை வாங்குவது எதனை விடுவது என மனம் பேதலிக்கும். காலை எழுந்ததும் ஜன்னல் ஊடாக பூத்துக் குலுங்கும் செடிகளை பார்க்கையில் கிடைக்கும் கொள்ளை இன்பத்திற்கு நிகர் இல்லை. செவ்வரத்தை இனத்தில் மாத்திரம் நான் ஏறக்குறைய 30 இனங்கள் வரை ஊரில் வைத்திருந்தேன். பேராதனை பூங்காவில் ஏறக்குறைய 60 வெவ்வேறு இனங்கள் இருந்தன. அந்த அழகுச் சோலை இப்போ ஆர்மிச் சோலையாக மாறியுள்ளது கொடுமையிலும் கொடுமை. அத்தனை இனங்கள் இந்நாட்டினிலே காண்பதற்கு இல்லை.

ஆனாலும் ஒரு சில வகைகளை இங்கே உள்ள விற்பனை நிலையங்களில் காணக் கூடியதாய் உள்ளது. செவ்வரத்தைகள் அயன மண்டலத்துக்குரியவை. ஆகவே இந்நாட்டின் குளிர் அவற்றிற்கு ஒத்துவராது. இந்நாட்டிற்குரிய (படத்தில் உள்ளது) இவை குளிர்காலத்தைத் தாக்குப்பிடிக்க வல்லவை. இலையினை உதிர்த்து விட்டு மீண்டும் வசந்த காலத்தில் துளிர் நிறையவே விதைகள் உதிர்ப்பவை. விதைகள் முளைக்கும். ஒன்று இரண்டல்ல நூற்றுக் கணக்கிலே. ஆகவே நான் காய்களையே பிடுங்கி எறிந்து விடுவதுண்டு. குளிர்காலம் போய் வசந்தம் வந்ததும் இலை உதிர்த்த மரத்தின் தண்டிலிருந்து துளிர் வரும். மற்றைய தரையினுக்கு மேலே உள்ள கிளைகள் உலர்ந்து விடுவதால் மீண்டும் வசந்தத்தில் மண்ணின் கீழே உள்ள பகுதியில் இருந்தே புதிய முளைகள் வரும்.

நம்ம ஊர்ச் செவ்வரத்தையைச் சாடியில் நாட்டினால் நம்மைப் போன்று புலம்பெயர வைக்கலாம். வசந்தத்திலும் கோடையிலும் வெளியே வைத்தால் அது பூத்துச் சொரியும். இலையுதிர் காலத்திலும், குளிர் காலத்திலும் அதற்கு நமது இல்லம்தான் தஞ்சம் கொடுக்க வேண்டும். ஏறக்குறைய ஐந்து மாதம் அது அகதிதான். எப்படியோ அங்கு இங்குமாகத் தேடி நான் எட்டு வெவ்வேறு வகையினைச் சம்பாரித்துவிட்டேன். அவற்றினைச் சாடிகளில் நட்டு வீட்டிற்கு வெளியே உள்ள படிகளில் வைத்தேன். தாராளமாகப் பூத்தன. குளிர் காலத்தில் வீடடிற்கு உள்ளே கொண்டு சென்று முற்புறத்தில் உள்ள விருந்தினர் தங்குமிடத்தில் வைத்தேன். உண்மையிலே அங்கு இப்போ விருந்தினர் என் செவ்வரத்தைச் செடிகள் மாத்திரமே. அந்த அறையினுள்ளே நடந்து சென்று அவற்றினுக்கு நீர் ஊற்றுவதற்கே சிறப்புப்பயிற்சி தேவையான அளவினுக்கு அவை அந்த அறையினை நிரப்பிக் கொண்டிருந்தன. நீர் ஊற்றுவது சற்றுக் கடினமாகத் தான் இருந்தது.

நான் ஸ்ரீலங்கா பிரயாணித்தது குளிர்காலத்தின் மிகக் கடைக்கூறு. ஆகவே நான் அவற்றினை உள்ளே வைத்துத் தான் பராமரிக்க வேண்டியிருந்தது. எனது சின்ன மகளிடம் இந்தப் பொறுப்பினை ஒப்படைத்தேன். நான் பிரயாணிகும் திகதி அன்று நான் நீரூற்றி விட்டு இன்னும் நான்கு வாரங்கள் வரை அவற்றினுக்கு தாகம் தீர்ப்பது உன் கடமை. செய்வியா என்றேன். செய்வேன் என்றார். நான் போய்விட்டேன். அங்கே இருந்த பொழுதும் இடையிடையே நீர் ஊற்றினாயா எனக் கேட்பதுண்டு. தங்கு தடையின்றி ஆம் என்ற பதில் வரும். வந்து இறங்கினேன். விமான நிலையத்தில் என்னை அழைக்க வந்திருந்தனர். நான் கேட்ட முதல் வினா எப்படி எனது செவ்வரைத்தைகள் என்பதே. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். ஏன் நன்றாய்த்தான் உள்ளன. அங்கு வந்து பாருங்களேன் என்றனர். வீடு வந்தோம். எனது பொதிகளைப் பெரிய மகள் எடுத்து உள்ளே கொண்டு செல்வதற்கு முன்னர் சின்னமகள் என்னைப் பார்த்து "அப்பா" என்றாள் வாஞ்சையாக. என்ன என்றேன். "அப்பா! வருடம் பிறந்த பின் முதல் முதலாக இப்போ தான் வீடு வருகிறீர்கள் ஆகவே எதற்கும் கோபிக்க வேண்டாம்" என்றாள். எதற்காக இவள் அத்தனை பீடிகை செய்கிறாள் என்ற எண்ணத்துடன் இறங்கினேன். சப்பாத்தினைக் கழற்றிய பின்னர் நேராக முன் விறாந்தையை நோக்கி எனது செவ்வரத்தைகளைப் பார்க்கச் சென்றேன். பக்கென்றது. என் முகத்தில் தோன்றியது, திகைப்பா, வெறுப்பா, ஏமாற்றமா? செவ்வரத்தைகள் அத்தனையும் வள்ளலாரை எனக்கு நினைவூட்டின. 'வாடிய பயிரைக் கண்டு வாடினேன்' என்றார் வள்ளலார். வாடினேன் நான். அத்தனையும் பரிதாபமாக தலைவிரி கோலமாக நின்றன. சில இலைகளை உதிர்த்த நிலையிலும், வேறு சிலவற்றில் இலைகள் காய்ந்து சருகாகும் நிலையிலும், இன்னும் சில வெள்ளைப் பூச்சிகளால் ஆரோகணிக்கப்பட்ட நிலையிலும் காணப்பட்டன. கழிவிரக்கம் மிகுந்தது.

(அடுத்த இதழிலும் வரும்)

யசோ சின்னத்துரை
கனடிய சட்டத்தரணி

வீடு
காணி
வர்த்தகச் சட்டம்

The Law Offices of
Yaso Sinnadurai
Barrister & Solicitor, Notary Public

Real Estate Law
Residential &
Commercial
Business Law

Tel: 416 265 3456 Fax: 416 265-2770

2100 Ellesmere Road, Suite 202, Scarborough ON M1H 3B7 (Markham & Ellesmere)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*சிந்தனைப் பூக்கள்*

எஸ். பத்மநாதனின் தொடர் 19

# சிட்டுக்களே வாருங்கள்!

அன்பான சிட்டுக்களே!

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு கருத்துக்களை உங்களுக்காக எடுத்துவரும் மாமாவுக்கு இந்த தடவை ஒரு புதிய சிந்தனை உருவாகியுள்ளது. பெரியவர்களிடம் மன்னிப்புக் கேட்கும் உங்களிடம் தவறு செய்யும் பெரியோர்கள் மன்னிப்புக் கேட்பதில்லை என்ற உறுத்தலே அதுவாகும். இந்த சிந்தனை வந்தமைக்குக் காரணம் உலக குழந்தைகளிடம் மன்னிப்புக் கேட்ட பிரான்ஸ் கால்பந்து அணிவீரர் ஜிடேன் செய்த செயலிலிருந்து உருவாயிற்று. மனிதனின் மனப்பக்குவமான மன்னிப்பு கேட்கும் பக்குவம் உங்களிடம் நிறையவே உள்ளதென்று மாமாவுக்கு நன்கு தெரியும்.

தங்கள் ஆசைகளுக்கும், கனவுகளுக்கும், சுயநலங்களுக்கும், பொறுப்பின்மைக்குமாக உங்களைப் பயன்படுத்துகின்ற பல பெரியோர்கள் உள்ளனர். உங்களை பிளாஸ்ரிக் பூக்களாகவே வளர்க்கின்ற பலரை மாமா கண்டுள்ளார். ஒரு காலத்தில் தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி என்று திரும்புகின்ற பக்கமெல்லாம் அன்பு செலுத்த, அரவணைக்க சொந்தங்கள் இருந்தன. இன்று அந்த இடமெல்லாம் எலெக்ரோனிக் கருவிகள் வந்துவிட்டன. நீங்கள் தனித்துப் போய் உள்ளீர்கள். உங்களுக்குக் கதை சொல்ல வேண்டிய பெரியவர்கள் நாடகங்களில் மூழ்கிக் கிடக்கிறார்கள். நீங்களோ ஆசிரியருக்குப் பயந்து வீட்டு வேலைகளை செய்து வருகிறீர்கள். அப்பாவும் அம்மாவும் பணம் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தீவுகளாகப் பிரிந்து வாழ்வதால் உங்களுக்குத் தனிமையே எஞ்சுகிறது.

அன்பான சிட்டுக்களே! உங்களை வளர்ப்பது ஒரு அற்புதமான கலை என்பது பலருக்கு தெரிவதில்லை. உங்களிடம் அன்பு செலுத்த நேரமற்ற தாய் தந்தை எவ்வளவு பணம் சேகரித்தாலும் பயனில்லை. நீங்கள் திருடினால், பொய் பேசினால், ஏமாற்றினால், கீழ்ப்படிய மறுத்தால் உங்கள் மீது தவறென்று மாமா சொல்ல மாட்டார். உங்கள் குடும்பத்தின் மீது மிகுந்த தவறு உள்ளது. அவசரம் அவசரமாக உணவை தந்துவிட்டு மெகா தொடர் நேரத்திற்கு தயார் செய்கின்ற சூழ்நிலையை உங்கள் பெற்றோர்கள் உருவாக்குவதினை எண்ணும்போது மாமாவுக்கு கண்கள் குளமாகின்றன.

உங்கள் புலன் உணர்வுகளை மறந்துவிட்டு 'மன்மதராசா' பாட்டுக்கு நடனமாட உங்களை தயார் செய்கின்ற பெற்றோர்கள் பலருள்ளனர். அதனை மேடையேற்றுவதில் துடியாய் துடிக்கின்றனர். உங்கள் உணர்வுகளை புரிந்து கொள்ளாது உங்கள் பிஞ்சு உள்ளங்களில் நச்சுக்களை விதைக்கின்றனர்!

சிட்டுக்களே! நீங்கள் ஒப்புயர்வற்ற படைப்பாளிகள்; சாமர்த்தியசாலிகள், நிறைய புத்தி உள்ளவர்கள். உங்களை புரிந்து கொள்ளாத பெற்றோர்கள் வெறும் மதிப்பெண்களுக்காகவே உங்களை தயார் செய்கின்றனர். அதுவே வாழ்க்கை என்றும் எண்ணுகின்றனர். உள்ளும் வெளியும் உள்ள உலகத்தின் அருமையை உங்களுக்கு சொல்லித்தர மறக்கிறார்கள். நீங்கள் 90 புள்ளிகள் எடுத்தாலும் 95 ஏன் எடுக்கவில்லை? என்று தான் கேட்பார்கள். இப்படி ஒரு ஆசை அவர்களுக்கு.

கண்ணதாசனின் கவிதை வரிகளில் "நீங்கள் பிறக்கும் போது நல்ல குழந்தைகள். ஆனால், நீங்கள் நல்லவராகவும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்று வருகின்றீர்கள். உங்களை நினைக்கும் போது ஒரு அரிய கவிதை ஞாபகத்திற்கு வருகிறது.

புத்தகங்களே! புத்தகங்களே!
சமர்த்தாய் இருங்கள்.
குழந்தைகளை கிழித்து விடாதீர்கள்.

மீண்டும் சந்திப்பேன்.

The Law office of
GARY
Anandasangaree

416 321 1100


Gary Anandasangaree
Barrister and Solicitor

10 Milner Busines Court
Suite: 210
Toronto, ON. M1B 3C6

Phone: 416 321 1100
Fax: 416 321 1107
gary@galaw.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5
Mon, Tues, Wedn, Thurs, Fri, Sat & Sun
Near Main Subway
Dr. Shan - (Wedn), Dr. Kalaichelvan (Thurs & Sun)
(Free consultations on alternate Sundays)

**(416) 690 0121**



**EARLY CHILDCARE ASST. (ECA)**
100% Guarantied Co-op placement
**JOB OPPORTUNITIES**
- *Child Care Assistant*
- *Child Care Worker*
- *Day Care Worker / Teacher*
- *Preschool Worker*
- *Infant Day Care Worker*

**COMPUTERIZED ACCOUNTING**
**JOB OPPORTUNITIES**
- *Accounting Assistant*
- *Accounts Manager*
- *Accounts payable clerk*
- *Accounts Receivable Clerk*
- *Payroll clerk*

**PERSONAL SUPPORT WORKER (PSW)**
100% Guarantied Co-op placement
**JOB OPPORTUNITIES**
- *Personal Support Worker*
- *Home Support Worker*
- *Personal Care Attendant*
- *Resident Care Aid*
- *Nursing Assistant*

**MEDICAL OFFICE ADMIN (MOA)**
**JOB OPPORTUNITIES**
- *Medical Office Assistant*
- *Medical Admin. Asst.*
- *Medical Receptionist*
- *Medical Secretary*
- *Hospital Ward / Unit Clerk*

**BUSINESS ADMINISTRATION**
**JOB OPPORTUNITIES**
- *Administrative Assistant*
- *Office Assistant*
- *Office Administrator*
- *Management Trainee*
- *Executive Assistant*

**NETWORK ENGINEERING**
**JOB OPPORTUNITIES**
- *Network Administrators*
- *Systems Administrators*
- *Technical Support Specialists*
- *Helpdesk Support*
- *LAN Administrators*

*Shaping careers for over 15 years*

*Changing your life begins with us.....*

*Week-ends & Evening Courses*
Canadian Security Courses,
QA / Software Testing, AccPac, Quick books, Ms Office,
Visual Basic, C++, Visual C#, .Net, A+, MCP, MCSE, CCNA

**Financial Assistance**
Financial Assistance may be available for those who qualify.
We welcome:
- ☐ Social Assistance receipients
- ☐ EI - currently receiving / received receipients
- ☐ Maternity benefits received receipients

# Computek College

**BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY**

**Kennedy / Sheppard**
(North-East Corner)
**Tel: 416-321-9911**
2347, Kennedy Road, Suite 301
Scarborough, ON., M1T 3T8

**Kennedy / Eglinton**
N/W Corner, Above Liberary
**Tel : 426.285.9941**
2390 Eglinton Ave East, Suite 248
Scarborough ON.,M1K2P5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

19

# வெள்ளிப் பணம் - டாலர்

2007ம் ஆண்டுக்கான வருமான வரிப்பத்திரம் பூர்த்தி செய்யும் காலம் சித்திரை மாதம் 30ம் திகதியுடன் முடிவடைந்தும் அவற்றினை பூர்த்தி செய்யாமல் இருப்பது ஆரோக்கியமான நடவடிக்கை அல்ல. சிலர் கவலையீனத்தால் இந்தத் தவறினை விடுகின்றார்கள். சிலர் தாம் வரி செலுத்த வேண்டிவரும் என்ற காரணத்தினாலும் நேரகாலத்துக்கு வருமானவரிப் பத்திரத்தினை பூர்த்தி செய்யாமல் விடுகின்ற நிலையினை அவதானிக்க முடிகின்றது. இப்படியான செயற்பாடுகள் அவரவர்களுடைய நிதிச் சூழலுக்கு ஏற்ப பல்வேறுவகைப்பட்ட முறையில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம்.

இதற்கு உதாரணமாக 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உள்ளவர்கள் 2007ம் ஆண்டுக்கான வருமானவரிப்பத்திரம் பூர்த்தி செய்யாவிட்டால் பிள்ளைகளுக்கான மானியக் கொடுப்பனவுகளை 2008ம் யூலை மாதத்துக்குப் பின்னர் பெறுவதில் தாமதம் ஏற்படும். காரணம் 2007ம் ஆண்டு குடும்ப வருமானத்தினை அடிப்படையாக வைத்துத்தான் 2008ம் ஆண்டு யூலை மாதம் முதல் 2009ம் ஆண்டு யூன் மாதம் வரையான கொடுப்பனவுக்கான தொகை கணக்கிடப்படுகின்றது. இதே போன்றுதான் GSTக்கான கொடுப்பனவுகளும். இது மாத்திரமல்ல ஒன்ராறியோ மாகாண அரசும் குழந்தைகளுக்கான கொடுப்பனவுகளை செய்ய இருக்கிற, குடும்ப வருமானமாக $26,000 டாலர்களுக்கு உட்பட்டவர்கள் இதன் மூலம் நன்மை பெற இருக்கின்றார்கள். எனவே நேரகாலத்துடன் வருமான வரிப்பத்திரத்தை பூர்த்தி செய்வது அவசியமாகும்.

வருமானவரிப்பத்திரம் பூர்த்தி செய்யும் போது பல்வேறுவகைப்பட்ட வரிக்கழிவுகள் (Non Refundable Tax Credit) உண்டு. இது எல்லோருக்கும் எல்லாம் பொருத்தமாக அமையமாட்டாது. தனிநபருக்கான வருமான வரிக்கழிவி னைதவிர (Personal Amount) உதாரணமாக கல்லூரியிலோ பல்கலைக் கழகத்திலோ கல்வி பயிலும் மாணவன் அல்லது மாணவிக்கு அவர்கள் செலுத்தும் கல்விக் கட்டணத்துக்கான வரிக்கழிவு உண்டு. இவர்கள் தமக்கு எந்த விதமான வருமானம் இல்லாத சூழ்நிலையிலும் வருமானவரிப்பத்திரம் பூர்த்தி செய்தல் வேண்டும். காரணம் வருடாவருடம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட வரிக்கழிவினை குறிப்பிட்டுக்காட்டி அடுத்தவரும் வருடத்திற்கு நகர்த்திச் செல்வதன் மூலம் கூடிய நன்மையினை பெறமுடியும். அதுமாத்திரமல்ல ஒன்ராரியோ மாகாண அரசு தரும் $100 டாலர்கள் வரையான வெள்ளிப்பணத்தினை பெறமுடியும். அத்துடன் 3 மாதத்துக்கு ஒரு தடவை கொடுக்கப்படும் GST Credit இனை பெறமுடியும். இந்த நிலையில் இருக்கும் மாணவர்கள் பெற்றோர்கள் கூடிய வருமானவரி செலுத்துபவர்களாக இருந்தால் அவர்களுக்கும் உதவமுடியும்.

2007ம் ஆண்டு வருமானவரியில் 18 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் உள்ளவர்கள் மற்றவர்களைவிட கூடிய வரிக்கழிவினை பெறுவதற்கான ஏற்பாடுகள் உண்டு. ஒரு பிள்ளைக்கு $2000 டாலர்கள் வரையான வரிக்கழிவினை இவர்கள் பெறமுடியும். இந்த வகையில் முன்னைய ஆண்டுகளை விட கூடிய சாதகமான நிலை குழந்தைகள் உள்ளவர்களுக்கு உண்டு.

உங்கள் வருமானத்தில் 3 சதவீதத்துக்கு மேற்பட்ட பணத்தினை நீங்கள் மருத்துவச் செலவுகள் மேற்கொண்டு இருந்தால் இதற்கான வரிக்கழிவும் கவனத்தில் கொள்ளப்படும்.

நீங்கள் தருமஸ்தாபனதிற்கு (Charity Organization) நன்கொடைகள் மேற் கொண்டால் இதற்கான வரிக்கழிவும் உண்டு. இதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய விடயம் நீங்கள் கொடுக்கும் நிறுவனங்கள் அரசாங்கத்தால் தரும ஸ்தாபனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதினை கவனத்தில் கொள்வதுடன் நீங்கள் கொடுக்கும் தொகை கூடுதலாக இருக்குமாயின் அதனை காசோலை மூலம் கொடுப்பதுதான் சிறந்த வழியாகும்.

இதே போன்று பல்வேறு வகையான வரிக்கழிவுச் சலுகைகள் உண்டு . எனவே ஒவ்வொருவரும் 2007ம் ஆண்டுக்கான வருமானவரிப் பத்திரத்தினை பூர்த்தி செய்து கொள்ளுங்கள். 18வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் இதில் கவனம் எடுப்பது அவசியமாகும்.

Sabesan's Choice!



விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்

வீடு திருத்தம்
மற்றும் நிலக் கம்பளம்
பொருத்தும் வேலைகளில்
தன்னிகரற்றவர்!

சபேசன்

ஒருமுறை
தொடர்பு கொண்டால்
பலன் புரியும்!

416 605 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் செந்தாமரை பத்திரிகையின்
13வது ஆண்டு பிறப்பை முன்னிட்டு

# செந்தாமரை கலையிரவு

MAY
10
2008
சனிக்கிழமை
மாலை 5 மணி

திரையுலகின்
முன்னணிப்
பாடகர்கள்
கலந்து
சிறப்பிக்கின்றனர்



**Winston Churchill**
**கலையரங்கம்**
**2239 Lawrence Avenue East**
**(Kennedy & Lawrence)**

*Music by*
**CHENNAI RHYTHMS**
*Music Orchestra*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றுமுள்ள செந்தமிழ் - 10



நக்கீரன்
தலைவர் - தமிழ்ப் படைப்பாளிகள் கழகம்

**தில்லைச்சிற்றம்பலத்தில் தமிழ்!**

''தில்லையம்பலத்தில் தேவாரம் - திருவாசகம் பாடக் கூடாது பாடினால் திருக்கோயில் தீட்டுப்பட்டு விடும் புனிதம் கெட்டுவிடும்'' என்று தில்லை தீட்சிதர்கள் போர்க்கொடி உயர்த்தியதைப் பற்றிச் சென்ற முறை எழுதியிருந்தேன்.

சென்னை - உயர் நீதிமன்ற ஆணையின் அடிப்படையில் இந்து அறநிலையத் துறை ஆணையர் விசாரித்து அளித்த ஆணையின்படியும் அதற்கு மேல் துறைச் செயலாளர் முடிவிற்கு இணங்கவும் சிதம்பரம் நடராசர் கோயில் திருச்சிற்றம்பல மேடையில் மார்ச்சு 02 ஆம் நாள் காலை 10 மணிக்கு சிவனடியார் ஆறுமுகசாமி தேவாரம் திருவாசகம் பாடுவார் என அறிவிக்கப்பட்டது.

சிதம்பரம் கோட்டாட்சியர் (பொறுப்பு) தாசில்தார், இந்து அறநிலையத் துறையின் கடலூர் மாவட்ட உதவி ஆணையர், தில்லைக் காளியம்மன் கோயில் செயல் அலுவலர் கிருஷ்ண குமார் மற்றும் அதிகாரிகள் காலை கோயிலுக்குள் வந்தனர்.

பெருந்தொகையான காவல்துறையினர் பாதுகாப்புக் கடமையில் கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் நிறுத்தப்பட்டு இருந்தனர்.

குறித்த நாளில் திருச்சிற்றம்பலத்தில் நின்று கொண்டு தேவாரம், திருவாசகம் பாட ஓதுவார் ஆறுமுகசாமியை யானையில் அமர்த்தி ஊர்வலமாக அவரது ஆதரவாளர்கள் அழைத்து வந்தார்கள்.

ஆறுமுகசாமி கோயிலுக்குள் தெற்குக் கோபுரவாயில் வழியாக அவரது ஆதரவாளர்களோடு உட்புகுந்தார். பாதுகாப்புக்கு சாதாரண உடையில் காவல்துறை அதிகாரிகளும் சென்றார்கள்.

ஆறுமுகசாமி தலைமையில் உள்ளே சென்ற ஓதுவார்கள், திருச்சிற்றம்பல மேடையில் நின்றபடி தேவாரம் பாட முயன்றனர். ஆனால் அவர்களை மேடையில் ஏற விடாதபடி படிக்கட்டில் கும்பலாக நின்ற தீட்சிதர்கள் தடுத்தனர். இரு சாராருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

ஆறுமுகசாமிக்குப் பாதுகாப்பாகச் சென்ற காவல்துறையினரை உள்ளே வரவிடாது தீட்சிதர்கள் வெளியே தள்ளினார்கள். மாவட்ட காவல்துறை அதிகாரி பிரதீப்பை தீட்சிதர்கள் படிக்கட்டில் இருந்து கீழே தள்ளிவிட்டனர். இதனால் காவல்துறையினருக்கும் தீட்சிதர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. காவல்துறையினரின் சட்டைகள் கிழிக்கப்பட்டன.

இதையடுத்து, காவல்துறையினர் போட்டிருந்த சட்டையைக் கழற்றி விட்டு சிற்றம்பல மேடையில் இருந்த தீட்சிதர்களை குண்டுக் கட்டாகக் கட்டி வெளியேற்றினர். பின்னர் சிவனடியார் ஆறுமுகசாமி சிற்றம்பல மேடைக்கு சென்று 15 மணித்துளி தேவாரம் பாடினார். பிறகு அவரைப் பாதுகாப்பாக காவல்துறையினர் தூக்கிச் சென்றனர். நடராசர் கோயில் சன்னிதானம் போர்க்களமாகக் காட்சி அளித்தது. அங்கு மேலதிக காவல்துறையினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டது.

கோயிலுக்குள் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து காவல்துறை 11 தீட்சிதர்கள் மீது வழக்குப்பதிவு செய்து சிறையில் அடைத்தனர். காவல்துறையினர் மீது கல் வீசிய ஆறுமுகசாமியின் ஆதரவாளர்கள் 34 பேர் கைது செய்யப்பட்டு அவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.
தீட்சிதர்கள் மேற்கொண்ட வன்முறை நந்தனை எரித்த நெருப்பு இன்னும் சிதம்பரம் தீட்சிதர்களின் நெஞ்சில் இருந்து அணையவில்லை என்பதைக் காட்டியது. அதே சமயம் உடலே வெந்தாலும் உணர்வு அடங்காது என்பது போல் புதிய புதிய நந்தன்கள் வந்து கொண்டே இருக்கிறார்கள் என்ற உண்மையையும் காட்டியது.

சாத்திரம், சம்பிரதாயம், மரபு, ஆகமம் என அறிவுக்குப் புறம்பான காரணங்களைக் கூறி தமிழ்நாட்டில், தமிழர்கள் எழுப்பிய கோயிலில் 'தென்னாடு (தமிழ்நாடு) உடைய சிவனே' என்று போற்றப்படும் கடவுளை தமிழில் பாடி வணங்கக் கூடாது என்று இந்த நூற்றாண்டில் கூட தில்லைச் தீட்சிதர்கள் தடுக்கிறார்கள் பழமையில் எவ்வளவு தூரம் ஊறிப் போயிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. பழமையைக் காப்பாற்ற நீதிமன்றப் படிக்கட்டுகளில் அவர்கள் ஏறி இறங்குவது வியப்பைத் தருகிறது.

**சாத்திரம், சம்பிரதாயம், மரபு, ஆகமம் என்பன மனிதர்கள் உருவாக்கிக் கொண்டவைதாம். மாற்றக் கூடாத விதி என்று எதுவும் கிடையாது. ஆண்டான் - அடிமை என்கிற சம்பிரதாயம் புதிய சிந்தனை காரணமாக சமாதியாகி விட்டது. மன்னர்கள் இன்று மகுடம் இழந்துவிட்டனர்.**

கைது செய்யப்பட்ட ஓதுவார் ஆறுமுகச்சாமி உள்ளிட்ட 34 பேரும் தீட்சிதர்கள் 11 பேரும் தமிழக முதல்வர் கருணாநிதியின் ஆணைப்படி மார்ச்சு 05 ஆம் நாள் கடலூர் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய ஆறுமுகசாமி நடராசர் கோயில திருச்சிற்றம்பலத்தில் நின்று கொண்டு தொடர்ந்து தேவாரம் திருவாசகம் பாடப் போவதாகத் தெரிவித்தார்.

இந் நிலையில் ''ஆறுமுகசாமியும் அவரது ஆதரவாளர்களும் அம்பலத்தில் நின்று கொண்டு பூசை நேரத்தில் தேவாரம் திருவாசகம் பாடலாம்'' எனத் தீட்சிதர் சபையின் பொதுச் செயலாளர் நவமணி திடீரென அறிவித்தார்.

அது மட்டுமல்ல, தேவாரம் திருவாசகம் பாடச் சென்ற சிவனடியார் ஆறுமுகசாமி மற்றும் அவரது ஆதரவாளர்களுக்கு சந்தணம், திருநீறு, மாலை அணிவித்து தீட்சிதர் நவமணி மரியாதை செய்தார்.

தீட்சிதர் நவமணி இந்த மாலை மரியாதையை எப்போதோ செய்திருக்கலாம். ''ஏனைய கோயில்கள் போலல்லாது தில்லைச் சிதம்பரத்தில் பூசைகள் ஆகம முறைப்படி அல்லாமல் வேதநெறிப் படி வழிபாடு செய்யப்படுகின்றன. எனவே பூசை நேரத்தில் அம்பலத்தில் நின்று தேவாரம் திருவாசகம் ஓதக் கூடாது. மீறி ஓதினால் தீட்டுப்பட்டுவிடும் புனிதம் கெட்டுவிடும்'' என்று ஒற்றைக்

→



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலில் நின்றிருக்க வேண்டியதில்லை. தீட்சதர்களின் மனமாற்றத்துக்கு என்ன காரணம்? சிவனடியார் ஆறுமுகசாமி மீது கொண்ட கழிவிரக்கமா? தமிழ் மீது ஏற்பட்ட திடீர்க் காதலா? தேவாரம் பாடினால் கோயில் தீட்டுப்பட்டு விடும் புனிதம் கெட்டுவிடும் என்று ஒப்பாரி வைத்தவர்கள் திடீரென்று ஆறுமுகசாமியை தேவாரம் திருவாசகம் ஓத அனுமதித்தது ஏன்? அனுமதித்தது மட்டும் அல்லாமல் பொன்னாடை, மாலை, மரியாதை ஏன் செய்யப்பட்டது?

சிதம்பரம் நடராசர் கோயிலில் தேவாரம், திருவாசகம் பாடுவோரைத் தடுக்க முயலும் தீட்சிதர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக அரசு எச்சரித்ததே தீட்சிதர்கள் பணிந்து போனதற்குக் காரணமாகும்.

**"தமிழில் மந்திரம் ஓதுவோரை தடுக்கக் கூடாது. மீறினால் சட்டப்படி மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். எந்தவித கட்டணமும் செலுத்தாமல் தேவாரத்தையும் திருவாசகத்தையும் சிதம்பரம் கோயிலில் படிக்கலாம். இது தொடர்பான அரசின் உத்தரவை தீட்சிதர்கள் மதித்து நடக்க வேண்டும்"** என தமிழக அரசு விடுத்த எச்சரிக்கை கூறியது.

இன்னொரு காரணமும் உண்டு. சிதம்பரம் கோயிலை அரசுடைமையாக்க வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் இயக்கப் பொதுச் செயலாளர் தொல். திருமாவளவன் அறிக்கை மூலம் வேண்டுகோள் விடுத்தார்.

சிதம்பரம் நடராசர் கோயில் கட்டி எழுப்பப்பட்ட நாளிலிருந்து தமிழில் தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட தமிழ் மறைகள் ஓதப்பட்டன. தில்லை நடராசனை வழிபட நந்தனாரும் தமிழில் பாடியபடியே தான் நுழைந்துள்ளார்.

வரலாறு இவ்வாறாக இருக்கும்போது அக்கோயில் பிராமணர்களின் முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு செல்லப்பட்ட பிறகுதான் அங்கு தமிழ் புறக்கணிக்கப்பட்டு சமஸ்கிருதம் புகுத்தப்பட்டது. பல்வேறு கால கட்டங்களில் தமிழில் மறைகள் ஓதுவதற்குப் பல போராட்டங்கள் வரலாறு நெடுகிலும் நடந்து வந்துள்ளன.

பழமை வாய்ந்த கோவில்களும், பெருமை வாய்ந்த கோவில்களும் இந்து சமய அறநிலையத்துறை அல்லது இந்தியத் தொல்லியல் துறை ஆகிய இரு துறைகளின் கட்டுப்பாட்டில்தான் இயங்கி வருகின்றன. ஆனால் சிதம்பரம் நடராசர் கோவில் மட்டும் தீட்சிதர்களின் மேலாண்மையின் கீழ் இயங்கி வருவது வியப்புக்குரியது.

தமிழக அரசு அனைத்துக் கோவில்களிலும் தமிழில் வழிபாடு நடத்தலாம் எனச் சட்டம் இயற்றிய பிறகு, அதனடிப்படையில் இந்து அறநிலையத்துறை சிவனடியார் ஆறுமுகசாமி தமிழில் தேவாரம், திருவாசகம் ஓதலாம் என அனுமதி வழங்கியது.


அதை எதிர்த்து தீட்சிதர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகும் தீட்சிதர்கள் தமிழக அரசின் சட்டத்தையும், நீதிமன்றத் தீர்ப்பையும் அவமதிக்கும் வகையில் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

ஆகவே தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு நடராசர் கோவிலை தனது முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அதன் சொத்துக்கள் அனைத்தையும் அரசே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் நந்தனார் நுழைந்து வழிபாடு நடத்திய வடக்கு வாசல் மூடப்பட்டுள்ள நிலையில் உள்ளது. நந்தனார் நுழைந்ததால் கோவில் தீட்டுப்பட்டு விட்டது என்கிற காரணத்தைக் காட்டி அவ்வாசலை அடைத்து விட்டார்கள். அவ்வாசலை தமிழக அரசு திறந்திட வேண்டும்.

அத்துடன், நடராசர் கோயிலில் காலங்காலமாக நந்தனார் மடத்துச் சுவாமிகள் தமிழில் ஓதி சிவனை வழிபட்டு வந்துள்ளனர். அம்மடத்தைச் சார்ந்த சுவாமிகளும் தேவாரம் உள்ளிட்ட திருமுறைகளை ஓதிட அனுமதியும் பாதுகாப்பும் வழங்கிட வேண்டும். (thats tamil - March 04, 2008)

இந்த அறிக்கை, தமிழக அரசின் அறிக்கை இரண்டையும் கண்ட பின்னரே தில்லைத் தீட்சிதர்கள் மிரண்டு போனார்கள். முதலுக்கே மோசம் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் தீட்சிதர்கள் தங்கள் எதிர்ப்பைக் கைவிட்டார்கள். (தொடரும்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் இருவர் - நமக்கு மூவர்
## புதிய தமிழ்த் தம்பதியினருக்கு 5000 டாலர்கள் ஊக்குவிப்புப் பணம்

**புலம்பெயர்ந்தவர்களுக்கான தமிழர் தகவலின் சிறப்புத் திட்டம்**

தமிழர் தகவல் சஞ்சிகை புலம்பெயர்ந்தவர்களுக்கான சமூக நலன் சார்ந்த புதிய திட்டமொன்றினை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றது. எமது சமூகத்தில் □ழந்தை பிறப்பு வீதம் வெ□வாகக் □றைந்து வருவதைக் கவனத்தில் எடுத்து இந்தத் திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஒரு வரியில் இத்திட்டத்தைச் சொல்வதானால், '2005 ஜனவரி முதலாம் திகதிக்□ப் பின்னர் சட்டப்படி திருமணம் புரிந்த/புரியும் தமிழ்த் தம்பதியினர், திருமணத் திகதியிலிருந்து வரும் ஆறு வருடங்களுக்□ள் மூன்று □ழந்தைகளைப் பெறுவார்களானால். அவர்கள் 5000 கனடிய டாலர்களை ஊக்□விப்புப் பணமாகப் பெறுவர்'.

எத்தனை தம்பதியினருக்□ இந்த ஊக்□விப்புப் பணம் வழங்கப்படும் என்ற கட்டுப்பாடில்லை. ஒவ்வொரு தம்பதியினருக்□ம் தலா ஐயாயிரம் டாலர்கள் வழங்கப்படும். முதலாவது தம்பதியினருக்கான பணத்தை 'அகிலன் அசோஷியேற்ஸ்' நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது. யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர் தலைவனாகவிருந்து அகால மரணமடைந்த எஸ். தி. அகிலன் ஞாபகார்த்தமாக இந்நிதி வழங்கப்படுகின்றது.


தமிழ்க் □ழந்தைகள் ஊக்□விப்புத் திட்டத்தின் முதற் கட்டம் 2010 டிசம்பர் 31ல் முடிவடையும். அதாவது, 2005 ஜனவரி 1 திகதிக்□ப் பின்னர் திருமணமா□ம் தம்பதியினர், அடுத்து வரும் ஆறு வருடங்களான 2010 டிசம்பர் 31க்□ முன்னர் எப்போது மூன்று □ழந்தைகளைப் (ஒற்றைப் பிரசவங்களாக) பெறுகின்றனரோ, அப்போது தமக்கான 5000 டாலர்களைப் பெறுவார்கள்.

எங்கள் களத்திலும் புலத்திலும் (தாயகத்திலும் புகலிடத்திலும்) பிள்ளைகள் பிறப்பு வீதம் மிக அருகி வருகின்றது. புதிய தம்பதியர் ஒரு □ழந்தையுடன் நிறுத்தி விடுகின்றனர். மறுபுறத்தில், திருமணமா□ம் வயதும் பின்னோக்கிச் செல்கின்றது. அடுத்த பக்கத்தில், உள்நாட்டு யுத்தத்தினால் தமிழர் இறப்பு வீதம் ஓங்கிக்கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு தசாப்தத்தில், அப்பாவி மக்களும் போராளிகளுமாக சுமார் ஒரு லட்சத்தை எட்டிப்பிடிக்□ம் எம்மவர் மரணமாகியுள்ளனர். பத்து லட்சம் வரையானோர் புலம் பெயர்ந்துள்ளனர்.

ஒரு காலத்தில் ஒவ்வொரு தமிழர் □டும்பத்திலும் சராசரியாக 4 அல்லது 5 பிள்ளைகள் என்றிருந்த நிலை இன்று மாறிவிட்டது. ஒரு பிள்ளையைப் பெறுவதற்□க்கூட மூன்று-நான்□ வருடங்களைப் பின்போடும் தம்பதியினரையே இன்று கூடுதலாகக் காண்கின்றோம். இந்த நிலைமை. மாற்றம் பெற வேண்டும். தமிழர் சனத்தொகை கீழோங்கிச் செல்வதில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது காலத்தின் நியதி.

இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களிடம் எடுத்துச் சொல்லுங்கள். □ழந்தைச் செல்வங்களின் அதிகரிப்பின் நோக்கத்தை அவர்களிடம் எடுத்துக் கூறுங்கள். இந்த ஊக்□விப்புத் திட்டம் பற்றிய விபரமான விளக்கத்தை தமிழர் தகவல் பிரதம ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தத் திட்டம் ஒரு பொழுதுபோக்□ப் போட்டியன்று. சமூக அக்கறையுள்ள பலர் கூடி எடுத்த முடிவின் வெளிப்பாடு. மற்றைய முன்னணித் தமிழ் ஊடகங்களிலும் இவ்விபரங்கள் வெளியிடப்படும். விரிவான விபரங்களைப் பெற 416 920 9250.

**Jude**

**Anthonypillai** LL.B. (Canada)

Barrister, Solicitor & Notary Public
Former Asst. Crown Attorney

**Phone**
**416 332 8547**

**யூட் அந்தோனிப்பிள்ளை**

கனடிய வழக்கறிஞர்
முன்னாள் அரச வழக்கறிஞர்

**தொலைபேசி**
416 332 8547

**தொலைநகல்**
416 332 8379

2390 Eglinton Ave. East
Suite 259
Scarborough ON
M1K 2P5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கணேஷ துர்க்கா தேவஸ்தானம்

# SRI GANESHA DURGA HINDU TEMPLE OF MISSISSAUGA







தொடர்புகளுக்கு:

'ஸ்ரீ விஜயலெட்சுமி வாசா அதிபர்', 'சிவாகம கிரியா பூஷணம்'

## சிவஸ்ரீ. பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள்

(ராஜன் குருக்கள்)

கனடிய திருமணப்பதிவு அதிகாரி, இந்துமதகுரு, புங்குடுதீவு - 10ஆம் வட்டாரம்
ஆலயப் பிரதமகுரு, ஆலய ஸ்தாபகர், முதல்வர் - அறங்காவலர் சபை

**7220 Tranmere Drive**
**Mississauga, ON. L5S 1L6**
**TEL: 905-405-0011 / 905-501-0011**

**www. sriganeshadurga.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NLR ACCOUNTING AND TAX SOLUTIONS

Personal Tax Returns
Corporate Tax Returns
Book-keeping
RST, GST, Payroll service

E-File
confidential
friendly and
fast service

Phone
**416 888 1128**
**416 492 7973**

Location
2525 Pharmacy Av.
Pharmacy Av & Finch Av. East
(Inside Universal Textiles)

NLR


## ஐம்பது ஆண்டு கால..

வெளியீட்டுரை வழங்க, ஒலிபரப்பாளர் விஜே குலதுங்கம் ஆய்வு செய்தார்.

எழுதுகோலால் ஆட்சி புரியும் எழுதுகோன் பொ. கனகசபாபதி அவர்களுக்கு தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் கணையாழி (தங்க மோதிரம்) சூட்டி மதிப்புச் செய்தார். சோமாஸ்கந்தா பழைய மாணவர் சார்பில் மலர் மாலை சூட்டப்பட்டது. ஒன்ராறியோ அக்கடமி சார்பில் பட்டாடை போர்க்கப்பட்டது. சிறப்புப் பிரதிகளைச் சுமார் முப்பது பேர் பெற்றதையடுத்து, நூலாசிரியரின் ஏற்புரை இடம்பெற்றது. வழக்கம் போன்று நகைச்சுவையுடன் கூடிய கருத்துச் செறிவான உரையில், கட்டுரைகளை எழுதிய நோக்கம், அதற்குக் கிடைத்த ஊக்கம், நூலாக்கியவர்களின் பங்களிப்பு ஆகியவைகளைக் குறிப்பிடத் தவறவில்லை. கடந்த பதினேழு ஆண்டுகளுக்கு மேலாகத் தமது கட்டுரைகளை வெளியிட்டு வருவதற்காக தமிழர் தகவலுக்கும், கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து பிரசுரித்து வரும் ஜேர்மனி வெற்றிமணிக்கும் நன்றிகளைத் தெரிவித்தார். நளாயினி பாலராஜனின் தமிழ்த்தாய் வணக்கப் பாடலுடன் விழா முடிவுற்றதையடுத்து, வருகை தந்தோருக்குப் பிரதிகள் வழங்கப்பெற்றது.

இந்த விழாவின் சில சிறப்புகளைப் பின்வருமாறு கூறலாம். குறிப்பிடப்பட்ட 5:45 மணிக்கு ஆரம்பமானது. சுமார் ஐநூறுக்கும் அதிகமானவர்கள் திரண்டு வந்து இறுதிவரை அமர்ந்திருந்தது. நேரக்கட்டுப்பாட்டுக்கு மதிப்பளித்த உரைகள். அனைவரும் நீண்ட வரிசையில் நின்று மேடையேறி நூலாசிரியரிடம் நேரடியாகப் பிரதிகள் பெற்றது. வீடு செல்கையில் அனைவருக்கும் இரவு உணவு கொடுத்து மகிழ்ச்சியுடன் வழியனுப்பிய குடும்பத்தினரின் ஏற்பாடு. அதிபரின் ஐம்பதாண்டு கால ரிஆசிரியப் பணியினை நிறைவாக்கும் வகையில் காலத்தால் அழியாத மூன்று பிள்ளைக-ளைப் (நூல்களை) பிரசவித்தமை.

குறையும் இல்லாமலில்லை; 1. சில அன்பர்கள் பின்னால் கூடி நின்று உரத்து அளவளாவி இடைஞ்சலாக இருந்தது. 2. சிலர் தமது வாகனங்களை வெளியே கண்டபடி நிறுத்தி போக்குவரத்துப் பிரச்சனையை ஏற்படுத்தியது. இதனால், நிகழ்ச்சி நெறியாளர் கதிர் துரைசிங்கம் அடிக்கடி ஒலிவாங்கியில் விசேட அறிவித்தல்களை விடுக்க நேர்ந்தது ■





"ஆசை, ஆசை இப்பொழுது
பேராசை இப்பொழுது
ஆசை தீரும் காலம் எப்பொழுது?"

**வீடு வாங்கும் உங்கள்
ஆசைகளை நிஜங்களாக்கிவிட
இன்றே அழையுங்கள்...**

**"Honesty, Integrity, Professionalism"**

**சாள்ஸ் தேவசகாயம் M.A**
Sales Representative
**Direct: 416-284-5555**
24Hrs: 416-284-4751
880 Ellesmere Rd., Suite 203
Scarborough. Ont. M1P 2W6

ROYAL LEPAGE
Connect Realty, Brokerage
INDEPENDENTLY OWNED AND OPREATED







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

Scholarship Plan [RESP]

Any Referral Service

JRB Universal Inc.
Almost All Services Available

B: 416 752 7555
C: 416 937 9081



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

• Credit Counseling • Accounting & Tax Services •

# ஆலய சன்னிதானங்களில்

## கனடா றிச்மன்ட்ஹில் இந்து ஆலயம்

வட அமெரிக்காவின் 'பெரிய கோயில்' என அழைக்கப்பெறும் றிச்மன்ட்ஹில் ஆலயம் திங்கட்கிழமையிலிருந்து வியாழக்கிமை வரையும் காலை 8:00 மணி முதல், பகல் 1:30 மணி வரையும், பின்னர் பிற்பகல் 5:30 மணியிலிருந்து இரவு 9:00 மஸி வரையும் திறந்திருக்கும். வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறை தினங்களிலும் காலை எட்டு மணி தொடக்கம் இரவு ஒன்பது மணி வரையும் திறந்திருக்கும். இரவு 9:30 மணிக்கு ஆலயம் மூடப்படும். ஆலய நிகழ்ச்சிகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 905 883 9109 தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம்.

## மிசிசாகா ஸ்ரீகணேச துர்க்கா ஆலயம்

மிசிசாகா 7220 Trammere Driveல் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீகணேச துர்க்கா இந்து ஆலயத்தில் தினசரி மூன்று காலப் பூஜைகளும் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. செவ்வாய்க்-கிழமைகளிலும் வெள்ளி முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. கிரியா வழிபாடுகளாலும், திருமணச் சடங்குகளாலும் வடஅமெரிக்கா முழுவதும் நன்கு பிரபல்யமான சிவஸ்ரீ பஞ்சாட்சர கிருஷ்ணராஜ குருக்கள் (ராஜன் ஐயா) அவர்களே இந்த ஆலயத்தை நிறுவியுள்ளார். இதன் பிரதம குருக்களும், அறங்காவல் சபையின் முதல்வரும் இவரே. ஆலய தொலைபேசி இலக்கம் 905 405 0011. ஸ்ரீவிஜயலட்சுமி வாசாவின் தொலைபேசி இலக்கம் 905 501 0011.

## ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம்

ஸ்காபரோ கென்னடி வீதியில் 3025ம் இலக்கக் கட்டிடத்தில் யுனிட் இலக்கம் 10 இல் (பிஞ்ச் வீதிக்கும் மக்னிக்கல் வீதிக்கும் இடையில், சன் பிளவர் பேணிச்சர் நிறுவனத்துக்கு முன்னால்) ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் தினசரிப் பூஜைகளுடன், முக்கிய தினங்களில் விசேட வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் இரவுப் பூஜையின் பின்னர் சுவாமி உள்வீதி வலம் வருதல் இடம்பெறுகின்றது. ஆலயத்தின் வழமையான மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் உட்பட்ட மேலதிக விபரங்களுக்கு ஆலயத்துடன் 416 291 8500 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

Motor Vehicle Accident

Criminal

வாகன விபத்து!

கிறிமினல்!

உங்கள் கணிப்பு தவறாகலாம்..

உரிய



சட்ட ஆலோசனைகளுக்கு

கலகலப்பு தீசன்

416-803-5296

WWW.KALAKALAPPU.NET



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

## செல்வன் ரமணனின்

# வாய்ப்பாட்டு அரங்கேற்றம்



அன்புடையீர்,

இளம் கலைஞர் மன்ற ஸ்தாபகர், இன்னிசை வேந்தர், சங்கீதபூஷணம் பொன். சுந்தரலிங்கம் அவர்களின் மாணவனும், மிசிசாகா ஸ்ரீ கணேச துர்க்கா தேவஸ்தான ஸ்தாபகர், பிரதம குரு ஸ்ரீ கிருஷ்ணராஜக் குருக்கள் (ராஜன் ஐயா), ஸ்ரீமதி ஜானகி அம்மா தம்பதிகளின் கனிஷ்ட குமாரன் செல்வன் ரமணன் கிருஷ்ணராஜக் குருக்கள் அவர்களின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் 27-04-2008 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணிக்கு Winston Churchill Collegiate Institute அரங்கில் 2239 Lawrence Ave.East, Scarborough, ON M1P 2P7 நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

**சிவஸ்ரீ கிருஷ்ணராஜக் குருக்கள்**

**ஸ்ரீமதி ஜானகி அம்மா**

மிசிசாகா ஸ்ரீ கணேச துர்க்கா தேவஸ்தான ஸ்தாபகர்

பிரதமகுரு, ஸ்ரீவிஜயலெட்சுமிவாச அதிபர்

**905-405 0011/ 905-501-0011**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Children's Education Trust of Canada**
**offered to the public by**
**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

**சமூக நம்பிக்கையையும்**
**நன்மதிப்பையும் பெற்ற**

சிவா
கணபதிப்பிள்ளை
**அவர்களை அழைத்து**
**விபரங்களைப் பெறுக!**

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca

# முணுமுணுக்கும் பக்கவாதம்

டாக்டர் எம்.கே. முருகானந்தன்

"ஒரு செக்கண்ட், ஒரு செக்கண்ட்தான், எனக்கு நேற்று திடீரென ஒரு பக்க கையையும் காலையும் இழுத்தது போலிருந்தது. மகனைக் கூப்பிடுவதற்கிடையில் எல்லாம் மாறிவிட்டது" என உங்கள் உறவினர் ஒருவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது சொல்கிறார். கலவரமின்றிப் பேச்சோடு பேச்சாகச் சொல்கிறார். அவரைப் பார்க்கிறீர்கள், மிக நன்றாகப் பேசுகிறார், நடக்கிறார், கை கால்கள் வழமைபோல இயங்குகின்றன. ஆரோக்கியமாகத்தானே இருக்கிறார்! ஏதோ பயந்திட்டார் போல என நினைக்கிறீர்கள். "அப்பாவின்ரை அண்ணா இரண்டு மாதத்துக்கு முந்தித்தான் ஸ்ரோக் வந்து இறந்தவர். அதை நினைச்சிட்டார் போல" என மகன் அலட்சியமாகச் சொல்கிறார்.

அலட்சியப்படுத்தக்கூடிய விடயமாகத் தெரியவில்லை. இவரைப்போன்ற 21000 பேரின் மருத்துவ ஏடுகளை ஆராய்ந்து பார்த்து, அவர்களை மேலும் விசாரித்த ஒரு கள ஆய்வின் பிரகாரம் அவர்களில் பலருக்கு உடல் ரீதியாகவும் நரம்பு மண்டல ரீதியாகவும் பாதிப்புகள் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. இதைத்தான் முணுமுணுக்கும் பக்கவாதம் என்கிறார்கள்.

இது ஏதோ புதிதான வியாதியோ அல்லது எப்போதாவது ஒரு சிலரை மட்டும் தாக்கும் முக்கியமற்ற பிரச்சினை என எண்ணி விடாதீர்கள். 45 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஏறத்தாழ 20 சதவிகிதமானவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என இவ் ஆய்வைச் செய்த டாக்டர் ஜோர்ஜ் ஹோவர்ட் கூறுகிறார். இவர் அலபாமா பல்கலைக்கழகத்தின் சமூக மருத்துவத்துறையின் தலைவராக இருக்கிறார். அதென்ன "முணுமுணுக்கும் பக்கவாதம்" என்கிறீர்களா? பக்கவாதம் பற்றி நிச்சயம் அறிந்திருப்பீர்கள். சிறிய அளவிலான பக்கவாதம் (Minor Stroke) பற்றியும் கேள்விப்பட்டிருக்கக் கூடும், அது பற்றிய எனது கட்டுரையை வாசித்திருக்கவும் கூடும். இப்பொழுது முணுமுணுக்கும் பக்கவாதம் பற்றிப் பேசலாம்.

இவர்களுக்கு பக்கவாதத்தை ஒத்த சில அறிகுறிகள் ஏற்படுகின்றன. ஆயினும் அவை மிக அற்பமாக இருப்பதால் பாதிக்கப்பட்டவரை கலவரப்படுத்துவதில்லை, வைத்தியர்களின் கவனத்தையும் பெரிதாக ஈர்ப்பதில்லை. இது வெளிக்காட்டாத பக்கவாதத்திலிருந்து (Silent Stroke) வேறுபட்டது. வெளிப்படையாக எந்தவித அறிகுறிகளுமற்ற போதும் CT Scan செய்து பார்க்கும் போது மூளையில் பாதிப்புகள் ஏற்பட்டது தெரிய வருவதையே "வெளிக்காட்டாத பக்க வாதம்" என்கிறோம்.

"நிச்சமற்ற அறிகுறிகளாக இருப்பதாலும், வெளிப்படையான பாதிப்புகள் அதிகம் இல்லாததாலும் முணுமுணுக்கும் பக்கவாதம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை, வீண் மருத்துவப் பரிசோதனைகளுக்கும் உட்படுத்த வேண்டியதும் இல்லை" எனச் சில மருத்துவர்கள் கருதுகிறார்கள். ஆயினும் "பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரம் குறைகிறது, அறிவார்ந்த செயற்பாடுகள் பாதிப்புறுகின்றன, மேலும் பல பாதிப்புகள் ஏற்பட்டிருக்கலாம். எனவே இது வெளிக்காட்டாத பக்கவாதத்தை ஒத்ததாக இருக்கலாம்" என கருதுகிறார் டாக்டர் ஜோர்ஜ் ஹொவேட்.

அதாவது CT Scan போன்ற மேலதிக பரிசோதனைகளைச் செய்தால் தான் தெரியவரும். அத்துடன் இது சிறிய அளவிலான பக்கவாதமாக இருக்கக் கூடும் என்பதும், அவ்வாறாயின் அத்தகையவர்களுக்கு பெரியளவிலான பக்கவாதம் வருவதற்கான சாத்தியங்களும் அதிகம் என்பதும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. பக்கவாதத்தினது அறிகுறிகள் அல்லது பக்கவாதம் வருகின்றது என்பதை உணர்த்தும் அறிகுறிகள் என்ன? திடீரென முகம், கை, கால் ஆகியவற்றில் தோன்றும் விறைப்புத்தன்மை அல்லது செயலிழப்பு மிக முக்கியமான அறிகுறியாகும். பொதுவாக உடலின் ஒரு பக்கத்தில் மட்டும் இது தோன்றுவதுண்டு. திடீரென ஏற்படும் மாறாட்டம் மற்றும் பேசமுடியாதிருப்பது, மற்றவர்கள் பேசுவதை புரிந்து கொள்வதில் சிரமப்படுவது, சடுதியாக ஏற்படும் பார்வைக்கோளாறு அல்லது முற்றாக பார்வைத் திறனை இழத்தல் இன்னுமொரு முக்கிய அறிகுறியாகும். ஒரு கண்ணில் அல்லது இரண்டு கண்களிலும் இது தோன்றலாம்.

சடுதியாக ஏற்படும் வேறு அறிகுறிகளான நடப்பதில் சிரமம், உடற் சமநிலை தளம்புதல், ஈடாட்டம், தலைச்சுற்று, உடல் உறுப்புகளின் செயற்பாட்டை ஒருங்கிணைத்து செயலாற்றுவதில் சிரமம் ஆகியவற்றிற்கும் முணுமுணுக்கும் பக்கவாதமே காரணமாகலாம். காரணம் சொல்ல முடியாத மிகக் கடுமையான தலைவலி மற்றுமொரு முக்கிய அறிகுறியாகும். இத்தகைய அறிகுறிகள் ஏற்பட்டால், அவை மிகக் குறைந்த நேரம் மட்டுமே நீடித்தாலும் இலேசாக எடுத்து, கவனத்தில் கொள்ளாமல் விடவேண்டாம். உடனடியாக பாதிப்புற்றவர் வைத்திய ஆலோசனை பெறுவது அவசியமாகும்.
Source; American Health Association

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DR. ILLANGO & ASSOCIATES
*Dental Office*

BRACE FOR A GREAT SMILE

DR. ILLANGO & ASSOCIATES

பல் சிகிச்சையில் சகல துறைகளிலும்
எமது சேவை

## DR. M. ILLANGO
B.D.S. Dip.Orth (Oslo).General Practioner Mainly Orthodontics
கிளிப் போடும் வேலை


## DR. MEHRAN MOJGANI
D.D.S. Dip. Perio.Gum Specialist
பல்முரசு வைத்திய நிபுணர்

## DR. SABAPATHY RAVEENDRAN
B.D.S,M.S,F.D.SR.C.S (Eng), General Practioner (Mainly Oral Surgery)
(அறுவைச் சிகிச்சையில் இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிபுணத்துவம் பெற்ற பல்வைத்தியர்)


## DR. ALI ADIPBFAR
D.D.S,M.D,F.R.C.D (C), Plastic Surgeon
(Wisdom tooth extraction under sedation)
மயக்கமாக்கி ஞானப்பற்கள் அகற்றுபவர்

## DR. JANAKI ILLANGO
B.D.S. குடும்ப பல் வைத்தியர்

## Dr. LAI YUNG CHEONG
B.D.S. குடும்ப பல் வைத்தியர்




**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. East, Units 204, 303
Scarborough, ON
**(416) 292-7004**





**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

## சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை


தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**


628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500

## NKS Draperies & Blinds



**210 Silver Star Road, Unit. 825**
**(Midland & Finch) Scarborough, ON**
**416 321 6420**



- **Vertical blinds**
- **Venetian blinds**
- **Draperies**
- **Curtains**
- **Shutters**

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org